"அறிவைத் தந்திடத் துடிக்கும் தமிழ்த் திங்கள் ஏடு"

# நம்மட முற்றம்

மேழம் (சித்திரை) 2023 | இல்லம் 03 | முற்றம் 06 | உருபா – 150.00



- தாக்குதல் இடி முழக்கம்
- இயக்கவியல் பொருள் முதல் வாதம் என்றால் என்ன?
- Say the colour with "U"
- இலங்கை வரலாற்றில் நீங்களும் எழுதலாம், ஓசை ஆகியவற்றின் பங்களிப்பு
- 13வது திருத்தச் சட்டம்
- பிச்சைக்காரனின் ஒருநாள் கனவு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## VG MAKEUP STUDIO AND ACADEMY



- Bridal Makeup
- Party Makeup
- Hairstyles
- Hair Cutting
- Blow Dry
- Eyebrow Threading
- Waxing
- Facials
- Acrylic and Gel Nails
- Manicure
- Pedicure
- Permanent Hair Straightening
- Ironing
- Saree Pleating & Draping
- Bridal Henna

- Advanced and Beginner
  Makeup Courses
  Hair Cutting and
  Hair Styles Courses

gracegnanam@gmail.com 262/Thirugnasampanthar st, Trincomalee. 0775955808

## VG MAKEUP STUDIO AND ACADEMY

*Vijithini Wijayanthiran*
Makeup Artist



| | |
|---|---|
| CONTACT | 0775955808 |
| E-MAIL | GRACEGNANAM@GMAIL.COM |
| ADDRESS | 262 THIRUGNANASAMPANTHAR ST, TRINCOMALEE |
| INSTAGRAM | VIJITHINI_GRACE |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மை ஆசிரியர்
திரு.கதிர்.திருச்செல்வம்

இதழ் ஆசிரியர் குழு

திரு. அ.ரவீந்திரன்
திரு. நா.காளிராசா
திரு. வ.மகேஸ்வரன்
திரு. வை.கமலநாதன்
திரு. தா.சிவானந்தம்
திரு. கி. அருள்செல்வன்
திருமதி. சுஜந்தினி யுவராஜா
ஜனாப். ஹ.மு.மு.மன்சூர்
ஜனாபா. மர்ளியா சக்காப்

தொடர்புகளுக்கு

நம்மட முற்றம்
48/116, விநாயகபுரம்,
கண்டித் தெரு,
திருக்கோணமலை.

தொலைபேசி : 0772908990

மின்னஞ்சல் :
nammadamuttam20@gmail.com

சிறுகதைகள் பக்கம்


- நாக்கிளிப்புழுவும் மீனும் 03
- இடி மின்னல் முழக்கம் 40


கவிதைகள்


- யாத்திரிகன் 11
- செல்வம் 19
- செரு(க்கு)ப்பு மனிதர்கள் 23
- பிச்சைக்காரனின் ஒருநாள் கனவு 23
- அசரீரி நினைத்திருந்தால் 26
- ஆறிலிருந்து அறுபது வரை 22
- காலம் காணாத காதல் 19
- இவள் ? யா 26
- சமூகப்பணி 31
- கல்வித் தொழிற்சாலை 32
- எழுச்சி பெறட்டும் இளைஞர் படை 32
- நிறங்கள் 37
- சடங்கு சம்பிரதாயம் 38
- அன்பு நிலைத்திருக்கும் 43
- மனிதனாய் வாழ்வோம் 47
- எங்கள் தாய்மொழி தமிழ் 56
- துளி 59


கட்டுரைகள்


- இயக்கவியல் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்றால் என்ன? 12
- 13வது திருத்தச் சட்டம் 20
- இலங்கை சிற்றிலக்கிய வரலாற்றில் நீங்களும் எழுதலாம், ஓசை ஆகியவற்றின் பங்களிப்பு 24
- அமைதி மொழியாகிவிட்ட ஏழுசுரம்(ஸ்வரம்) 27
- தாக்குதல் இடிமுழக்கம் 33
- Say the Colour with "U" 44
- திருகோணமலை திருமங்கலாய் காட்டுப்பகுதியில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவன் ஆலயம் 48
- நம்மட படைப்பாளி 54
- நூல் திறனாய்வு 57




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரிலும் மேலானது தாய்மொழி !

"இந்தியாவில் பத்தாயிரம் பள்ளிகளில் மூன்றாம்வகுப்பில் படிக்கும் எண்பத்தாறாயிரம் மாணவர்களிடம் 'ஸ்ரான்போட்- Stanford)' எனும் அமைப்பு 'தங்களது தாய்மொழியில் பள்ளிப்பிள்ளைகள் என்னநிலையில் இருக்கிறார்கள்' என்பதைக் கண்டறிவதற்காக ஓராய்வு நடாத்தியது. இந்தியாவிலுள்ள இருபதுமொழிகள் பேசும் பிள்ளைகளிடம் இந்த ஆய்வு நடாத்தப்பட்டது. அவர்களில் தமிழ் மொழி மூலமாக படிக்கும் பிள்ளைகள் தங்கள் தாய்மொழியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாக அந்த ஆய்வின் முடிவு சொல்லியிருக்கிறது." இந்தியாவில் மாத்திரமல்ல ஈழத்திலும் இதுதான் நிலை. தற்போது தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட வளர்ந்தோர்கள் பேசும் மொழியில் நாற்பது வீதத்திற்கும் குறைவான தமிழ்ச்சொற்களே உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மிகுதியை ஆங்கிலமும் சமற்கிருதமும் நமது மொழியை ஆக்கிரமித்திருக்கிறது. இந்த நிலை தமிழ்மொழியினைத் தாய்மொழியாக கொண்ட மக்கள் மகிழ்ச்சிப் படுகின்ற விடயம் அல்ல.

தொடர்பாடலுக்குத்தானே மொழி எனும் வாதம் தற்போது நியாயப்படுத்தலுக்காக சொல்லப்படுகிறது. இது தொடர்பான கூடுதல் விளக்கத்தினை இந்த இதழில் உள்ள "Say the colour with 'U'" எனும் கட்டுரை தருகிறது. வடபகுதியிலே போராட்ட காலத்தில் எடுக்கப்பட்ட தமிழ்மொழி ரீதியிலான காத்திரமான முன்னெடுப்புகளால் அதிகளவான தமிழ்ச்சொற்கள் பயன்படுத்தப்படத் தொடங்கி தற்போதும் அது தொடர்கிறது. அந்தச் சொற்கள் புழக்கத்தில் வந்துவிட்டன. எடுத்துக்காட்டாக வெதுப்பகம், வெதுப்பி போன்ற சொற்களைச் சொல்லலாம். உண்மையில் தற்காலத்தில் தமிழ்மொழியைத் தங்கள் தாய் மொழியாகக் கொண்ட நாம் நமது தாய்மொழியில் பற்றுடனும் அக்கறையுடனும் இருக்க வேண்டிய வரலாற்றுக்காலத்தில் இருக்கிறோம். தொடர்ச்சியாக தமிழ்மொழியுடன் பிறமொழிகளை அதிகளவில் கலந்து பேசுவதென்பது நாம்; நமது தாய்மொழிக்குச் செய்கின்ற துரோகமாகும். உலகின் பழமையான செம்மொழியான ஒரு மொழியைப் பேசுகின்ற நாம் உலக மக்களிடத்திலே பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரியவர்களக உள்ளோம். அவ்வாறான நாம் எதற்காகப் நமது மொழியுடன் பிறமொழிகளைக் கலக்க வேண்டும் எனும் வினாவினை ஒவ்வொரு தமிழ்பேசுவோரும் கேள்விடுத்தி தமிழில் பிறமொழி கலவாது பேசுவதுடன் நமது எதிர்காலப் பிள்ளைகளையும் தமிழ்மொழியில் பற்றுள்ளவர்களாக்குவது நம் ஒவ்வொருவரினதும் வரலாற்றுக் கடமையும் பொறுப்பும் என்று உணர்ந்து செயற்படுவோம்.

**முதன்மை ஆசிரியர் – நம்மட முற்றம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1977 வைகாசி மாதம் பன்னிரண்டாம் நாள். வியாழக்கிழமை.

'அம்மாடியோவ் இஞ்ச கொஞ்சம் வாவண்டியம்மா. அத எடுத்துத் தந்திற்று நில்லன்.'

'இஞ்சபாருங்க நான் அவசர அவசரமா சட்டிபானயெல்லாம் பூசுறன். அவள் பள்ளிக்குப் போறதுக்கு சாப்பாடுமல்லோ செய்யோணும்'

'இப்பதானேடியம்மா ஆறே கால். ஒரு குழல் புட்டவிக்க உனக்கு என்ன பத்து மணித்தியாலமா வேணும்'

'சும்மா கிடங்க. அவளப் பள்ளிக்கு அனுப்பிப் போட்டுவாறன். உங்களுக்குக் கொஞ்சம் சுணங்கினா என்ன இப்ப. அது ஒண்டும் ரெத்தம் குடுக்கிற வேல இல்லத்தானே'

கொஞ்சம் சூடாகத்தான் பொரிந்து தள்ளினாள் கார்மேகம். துணைவிக்கு கோபம் வந்து விட்டால் தானாகவே தணிந்து விடுவது மயில்வாகனத்தாருக்குப் பழக்கமாகியிருந்தது. அப்படித்தான் உடனேயே தணிந்துவிட்டார்.

காலையில் எழுந்ததும் தனது தூண்டல்களயை எடுத்து நுனியைப் பார்த்து தங்கூசி கழன்றுவிடாமல் இருக்கிறதா? மிதப்பு நல்ல நிலையில் இருக்கிறதா? தூண்டில் ஊசி நன்றாக இருக்கிறதா என்று பார்ப்பது வழக்கம். அன்றும் அப்படித்தான் மயில்வாகனத் தார் பார்த்த போது தங்கூசியை முதல் நாளிரவு எலியோ பூனையோ கடித்து அறுத்து விட்டிருந்தது. கவலையடைந்த மயில்வாகனத்தார் தான் முன்னேற்பாடாக வாங்கி வைத் திருந்த தங்கூசியை கார்மேகத்திடம் கொடுத்து பெட்டகத்தில் வைக்கச் சொல்லியிருந்தார். பெட்டகத்திறப்பை கார்மேகம் யாருக்கும் கொடுக்கமாட்டாள். திறப்பு வைத்திருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தையும் இன்றுவரை யாருக்கும் சொன்னதும் கிடையாது. அதனால்தான் அவளைக் காத்துக்கிடக்க வேண்டியிருந்தது. பிள்ளையைத் தனது மிதிவண்டியில் கொண்டு சென்று பள்ளியில் விட்டு விட்டு அப்படியே சோலியன் ஓடயில் தூண்டில் போட்டு பிடிபடும் மீன்களைக் கொண்டுவந்து நாலுவாசல் பிள்ளையாரடிச் சந்தியில் வைத்திருக்க, தம்பலகமம் சந்திப் பக்கத்திலிருந்து வருபவர்களும் தம்பலகமத்திலிருந்து நாலுவாசல் பிள்ளையாரடிச் சந்தியைக் கடந்து செல்பவர்களும் வாங்கிச் செல்வார்கள். உடன் மீனா கவும் மலிவாகவும் இருப்பதால் யாரும் பேரம்பேசி விலைக்குறைப்பில் இன்றுவரை மயில்வாகனத்தாருடன் ஈடுபட்டதில்லை. கதைக்கும்போதும் மெதுவான சத்தத்துடன் சொற்களைத் தன்வாயிலிருந்து ஒவ்வொன்றாகவே வெளியேற்றும் பண்பு அவருக்கே உரித்தானது. சின்னப் பிள்ளைகளும் அவருக்கு நண்பர்கள்தான்.

'மயில்ஐயா மயில்ஐயா' என்று பிந்நேரங்களில் அயல்வீட்டுப் பிள்ளைகள் சுற்றிச் சுற்றி ஓடிவருவார்கள். தனது சட்டைப் பையில் இருந்து சிவப்பு. மஞ்சள் என தோடம்பழ மிட்டாய்களை எடுத்துக் கொடுப்பார். மிட்டாய்களைத் தங்கள் வாயில் போட்டுக் கண்களைச் சிமிட்டிச் சிமிட்டி ஒச்சொட்டி இரசித்து மகிழ்ந்து சுவைப்பதைப் பார்த்துக் கொண்டிருந்து மனம் குளிர்ந்து தானும் மகிழ்வார். சிறுபிள்ளை மனசுக்காரர்தான் மயில்வாகனத்தார். மரியாதையாக மதிக்கப்படுபவர்களின் பெயர்களுக்குப் பின்னால் 'ஆர்' போட்டு அழைப்பது தம்பலகமத்து வழக்கம். அந்த ஆருக்கு உரித்துடையவர்களில் மயில்வாகனத்தாரும் உள்வாங்கப்பட்டிருந்தார். 'தங்கூசிய இவள் எடுத்துத் தந்தாள் எண்டா ரெண்டு தூண்டில்களையும் கட்டிரலாண்டாப்பா' தனது மனதினுள் கவலைப்பட்டவராக வளர்த்த நாய் முகத்தைப் பார்ப்பதுபோல் தனதுதுணைவி சட்டிபானை பூசுவதையே பார்த்துக் கொண்டு செயலறு நிலையில் தன் வீட்டுக்குந்தில் அமர்ந்திருந்தார். கார்மேகம் சட்டிபானைகளைப் பூசிக்கழுவி விறுவிறு என எல்லாவற்றையும் சமயலறைக்கு வெளியே இருந்த சிறாம்பியில் வைத்துவிட்டு பிட்டுக்குழலையும் சருவச்சட்டியையும் எடுத்துக் கொண்டு சமையலறைக்குள் அரக்கப் பரக்க நுழைந்தாள்.

'இஞ்சேருங்களன் ஒருவாளித் தண்ணி அள்ளிவந்து தாங்களன். தண்ணி அள்ள மறந்திற்றன்' துணைவருக்குச் சொல்லிக் கொண்டு நேற்று துருவி மிச்சம் வைத்திருந்த தேங்காய்ப்பாதியை எடுத்து கொஞ்சமாக இருந்தநீரில் கழுவியபின் துருவினாள். துணிப் பையிலிருந்த நன்றாக வறுத்த அரிசிமாவில் ஒருசுண்டு அளந்து சட்டியில் போட்டு அடுப்பில் கொதித்துக் கொஞ்சம் ஆறியிருந்த நீரை ஊற்றிக் குழைத்து அரிசி அளக்கும் சுண்டினால் கொத்திக்கொத்தி மாவைக் குழைத்தாள். மாவைக் பிட்டுக்குழலில் போட்டவள் எஞ்சியிருந்த தேங்காய்ப்பூவை இன்னுமொரு சிறியசட்டியில் போட்டுவிட்டு


ஒரு கோடிக் கண்களால் பார்க்கும் நம்மை பலகோடிக் கண்கள் பார்த்துக் கொண்டிருப்பதையும் உணரவேண்டும்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டுத் தூளும் உப்பும் போட்டுப் பிசைந்தாள். 'நல்ல நேரத்தில வந்தீங்கப்பா. அந்த தேசிக்காய ஒருக்கா வெட்டித்தாங்களன்' இடதுகை ஆட்காட்டி விரலால் தேசிக்காய் இருந்த இடத்தை சுட்டிக் காட்டினாள். துணைவர் வெட்டிக் கொடுத்த தேசிக்காயை வலதுகையால் பிழிந்து இடது கையின் நாலுவிரல்களையும் ஒன்றாகச் சேர்த்துப் பிடித்தபடி சிறிய இடைவெளியை உருவாக்கி தேசிப்புளியை விட்டாள். இரண்டு மூன்று தேசிக்கொட்டைகள் அவளது இடது கையில் தங்கிக்கொண்டன. தேசிப்புளி விட்டுப் பிசைந்த தேங்காய்ப்பூச் சம்பலை ஆட்காட்டி விரல் நுனியால் எடுத்து நுனிநாக்கில் வைத்துச் சுவைபார்த்தாள். நாக்கில் சம்பல் பட்டதும் கண்களை மூட வைத்தது புளியின்சுவை. 'சா..' என்று மனதினுள் தனது கைப்பட்ட தேங்காய்ப்பூச் சம்பலின் சுவையைப் பாராட்டிவிட்டு கையைக்கழுவும் போது. பிட்டுக்குழலிலிருந்து ஆவி வெளியேறியது. பிட்டை எடுத்துச் சட்டியினுள் போட்டு மூடிவிட்டுக் கட்டியிருந்த சேலையை வலதுபக்க இடுப்பில் எடுத்துச் செருகிக் கொண்டு சமயலறையிலிருந்து வெளியேறிய போது மகள் மதிச்செல்வி குளித்து முடித்துத் தலையைத் துடைத்தபடி விறாந்தைக்குள்ளிருந்து வெளியே வந்தாள்.

மகளை அழைத்து அணைத்து நெற்றியில் முத்தமிட்டுக்கொண்டு இரட்டைப் பின்னலாகப் பின்னினாள் அம்மா. கறுத்தநிறத்திலான தலைநாடாவினால் பின்னலை அழகாகக் கட்டினாள். 'அம்மா ரெண்டும் சமனா இருக்குத்தானே' 'ஓண்டியம்மா .. ஒரு நாள் எதே தவறா சின்னனும் பெருசுமா போயிற்று எண்டதுக்காண்டி ஒரே அத நீ குத்திக் காட்டிற்று இருக்கிறா என' கொஞ்சம் சிணுங்கலுடன் சொன்னாள் கார்மேகம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மதிச்செல்வி ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது மகள் தலையைப் பின்னிவிடச் சொல்ல அடுப்பில் ஆணத்தை வைத்துவிட்டு அவசர அவசரமாக தலையைப் பின்னிக் கொண்டிருந்தாள் கார்மேகம். முதல் முடித்த பின்னலை மகள் முன்னால் எடுத்து பார்த்துக்கொண்டிருக்க கார் மேகம் இரண்டாவது பின்னலையும் விரைவாக பின்னிவிட்டு 'ஆணம் பொங்குதுடி நீ பள்ளிக்குப் போயிற்று வா' எனக் கூறிக் கொண்டே சமயலறைக்குள் ஓடிவிட்டாள். பள்ளியில் மதிச்செல்வியைப் பார்த்த தோழிகள் எல்லோரும் வாய்க்குள் சிரித்துக்கொண்டு சென்றனர். மதிச்செல்விக்கு 'ஏன் தன்னைப்பார்த்துச் சிரிக்கிறார்கள்' என்பது புரியவில்லை. அவளின் விருப்பத்திற்குரிய சாந்தகௌரி ஆசிரியர்தான் மதிச்செல்வியை அழைத்து பின்னல்கள் உயரமும் கட்டையாகவும் இருக்கும் விபரத்தைக் கூறி இரண்டு பின்னல்களையும் சமனாகப் பின்னி விட்டார். மதிச்செல்வி பள்ளி முடிந்து வந்து அம்மாவில் ஏறிப்பாய்ந்து அன்று பகல் சாப்பாடும் சாப்பிடாமல் அம்மாவிற்குத் தண்டனை கொடுப்பதாக எண்ணி தனதுவயிறு பசியால் நுள்ளி நுள்ளி எடுக்க அவதிப்பட்டுக் கிடந்ததுதான் மிச்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளைப் பள்ளியல் இறக்கி விட்டு வீட்டுக்கு மயில்வாகனத்தார் வந்த போது தங்கூசியை எடுத்து வைத்திருந்தாள் கார்மேகம். 'பிள்ளயப் பள்ளியில விட்டிற்று வரக்கொள்ள ரகீம் வந்தவன். காசக் கேட்டவன். ரெண்டு மாசத்தில தாறம் எண்டு வாங்கின. இப்ப எட்டுமாசம் ஆகிற்று. கெஞ்சம் கோவமாத்தான் சொல்லிற்றுப் போறான்' 'வட்டார மட்டத்தில் நடைபெறுற தமிழ்மொழி நாள் போட்டியில பேச்சுப் போட்டிக்கு மலைக்குப் போகோணுமாம். போறதுக்கு இருபது உருபா தேவையெண்டு அதிபர் சொன்னவராம். எப்பிடியெண்டாலும் அவளப் போட்டிக்கு அனுப்போணும். வட்டார மட்டத்தில முதலாவது வந்தவங்கள மட்டும்தான் தேசியப்போட்டிக்கு அனுப்பிறதாம். தான் வட்டாரத்தில முதலாவது வருவன் எண்டு சொல்றாள். ஒருக்கா சாபி நகருக்குப் போய் ரகீம் நானாட்டக் கேட்டுப் பாருங்களன்" என்றாள். துணைவியின் கோரிக்கை நியாயமானது என்பதை உணர்ந்த அப்பா இருபது உருபாவினை வாங்கிக் கொடுத்தார்.

மகள் சொன்னதுபோல் வட்டார மட்டத்தில் முதலாவதாகத்தான் வந்தாள். தேசிய மட்டத்திற்குச் செல்வதற்கும் ரகீமிடம்தான் போய்நிற்க வேண்டியிருந்தது. தேசிய மட்டத்தில் மூன்றாம் இடம் கிடைத்தது மதிச்செல்விக்கு. மொத்தமாக தமிழ்மொழிநாள் பேச்சுப் போட்டி நூற்றியிருபது உருபா கடனாளியாக்கியிருந்தது மயில்வாகனத்தார் குடும்பத்தை. 'என்னப்பா செய்யிறது? எட்டு மாதமா குடுக்காட்டி ஆருக்குத்தான் கோபம் வராது.' 'இன்னும் ஒருமாதத்தில தாறம் எண்டு சொல்லியிருக்கிறன். சரி எண்டுற்றுத்தான் போறான். பாப்பம் எப்பிடியெண்டாலும் குடுக்கத்தானே வேணும்' எனக் கூறிக் கொண்டு தங்கூசியை தூண்டல்களையில் கட்டிமுடித்து இரண்டு தூண்டில்களையும் மண்வெட்டியையும் எடுத்து மிதிவண்டி கிடைச்சட்டகத்தில் வைத்துச் சணல்துண்டுகள் இரண்டினால் முன்னுக்கும் பின்னுக்குமாகக் கட்டினார் மயில்வாகனத்தார்.

'நான் போயிற்று வாறன்' எனக்கூறிக் கொண்டே தனது துணைவியின் பதிலை எதிர்பாராதவராக சோலியன் ஓடையை நோக்கி தனது மிதிவண்டியைச் செலுத்தினார். ஆவன்னாகடைக்குச் சென்று அரை இறாத்தல் பாணும் நாலு அவுன்ஸ் சக்கரையும் பகல் சாப்பாட்டிற்காக வாங்கிக்கொண்டு புதுக்குடியிருப்புச் சுடலைத் தெருவினால் செல்லும்போது ஒப்பிலாமணியரின் மகன் வவா வந்துகொண்டிருந்தார். மயில்வாகனத்தாரைக் கண்டதும்,
'அட மயில்வாகனம் கொஞ்சம் நில்லுடாப்பா. எனக்கு இண்டைக்கு இரவுக்கு சூட்டுக்களண்டாப்பா. எனக்கு வரக்கொள்ள ரெண்டு இறாத்தல் மீன் தந்திற்றுப் போவன்'
'சரி வவா, நான் வழக்கமா அதாலதான் போறனான். உனக்காண்டி இதால வந்து தந்திற்றுப் போறன் அப்ப' என்று கூறிக்கொண்டு விரைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இண்டைக்கு சகுனம் கெட்டதாவும் இருக்கு நல்லதாவும் இருக்கு. காலயில ரகீம் சொன்னவை கவலையைத் தந்துகொண்டிருக்க வவாவின் கோரிக்கை மகிழ்ச்சியைக் கொடுத்தது. 'வாழ்க்கை எண்டா நல்லதும் கெட்டதும் இருக்கிறமாரி கவலயும் மகிழ்ச்சியும் இருக்கத்தானே செய்யும்' மனதில் ஓடிக்கொண்டிருக்க மிதிவண்டியைக் கொஞ்சம் வேகமாக மிதித்து வழமையைவிட சற்று வேகமாகவே சோலியன் ஓடைக்கு வந்துவிட்டார் மயில்வாகனத்தார். அருகில் இருந்த இடத்திலிருந்த நிலத்தில் சின்னச் சின்னக் குவியலாக கறுப்பு நிறத்தில் மண் வெளிக்கிளம்பியிருந்த இடங்களைப் பார்த்துப் பார்த்து தனது மண்வெட்டியால் வெட்டினார். நாக்கிளிப் புழுக்கள் வெட்டுப்பட்டும் இரத்தம் ஓடிக் கொண்டும் வெட்டுப்படாமலும் நெளிந்து தெரிந்தன. அவற்றை எடுத்து வழக்கமாகப் பயன்படுத்தும் சிரட்டையில் கொஞ்சம் மண்ணை அதன் அடியில் போட்டு அதன் மேல் புழுக்களைப் போட்டார். அவை நெளிந்து நெளிந்து மண்ணைத் துளைத்துக் கொண்டு சிரட்டையின் அடிப்பகுதியை நோக்கி 'அப்பாடா ஒருவாறு தப்பிற்றம்' என்ற எண்ணத்திலோ என்னவோ பதுங்கிக் கொண்டன. அதுகளுக்குத் தெரியாது இன்னும் கொஞ்ச நேரத்திலயோ அல்லது சில மணிநேரங்களிலேயோ தங்களது வாழ்க்கை மீனுக்கு உணவாகிச் சாகப்போகிறோம் என்று.

மிதிவண்டியை வழக்கமாக வைக்கும் பாலை மரத்திற்கு கீழே வைத்து. கொண்டுவந்த சங்கிலியால் சுற்றி. ஆமைப் பூட்டால் பூட்டித் திறப்பை தனது மேற்சட்டைப் பையினுள் போட்டுக்கொண்டு ஆற்றை நோக்கி நடந்தார். வழக்கமாக அங்கு மீன்பிடிக்க வரும் பாரதிபுரத்தில் வசிக்கும் சகா யம் ஏற்கனவே மீன் பிடித்துக்கொண்டிருந்தான். சகாயம் மயில்வாகனத்தாரை விட எப்படியும் பதினான்கு வயதெண்டாலும் குறைந்தவன். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பொக்குறுணியில் இருக்கும் தேவாலத்திற்குப் போய் ஆராதனையில் ஈடுபடும் கடவுள் பக்தியுள்ளவன். வீட்டு வறுமையால் படிப்பை ஆறாம் வகுப்புடன் நிறுத்திவிட்டு மீன்பிடிப்பதைத் தொழிலாகக் கொண்டவன். அவனது மீன் பிடியினால்தான் அவனது வீட்டில் இருக்கும் ஐந்து உயிர்களும் வாழ்ந்துகொண்டிருந்தன.

'என்ன சகாயம் நேரத்தோட வந்திற்றா போல'

'ஓம்மண்ண, அம்மா நேரத்தோட எழுப்பி விட்டிற்றா. வீட்ட இருக்கிறத விட இஞ்சவந்தா மீனை யாவது பிடிக்கலாமெண்டு வந்திற்றன்'

'ம்.. அதுவும் நல்லதுதான்.' எனக் கூறிக்கொண்டே ஆள்காட்டி விரலால் சிரட்டையில் மேலால் கிடந்த மண்ணைக் கிளறி புழுவொன்றை எடுத்து அதை வலதுகைப் பெரு விரலாலும் ஆள்காட்டி விரலாலும் நுள்ளிப் பாதியாக்க புழு துடித்துத் துடித்து இரண்டானது. உள்ளங்கையில் ஒரு துண்டு இருக்க மற்றைய துண்டுப்புழு சிரட்டையினுள் விழுந்து மீண்டும் சிரட்டை மண்ணுக்குள் தற்காலிக உயிர்ப் பாதுகாப்புத் தேடிக்கொண்டது. ஆனால் சாகவில்லை. புழுவிற்குத்தான் எவ்வளவு நெஞ்சுரம், சின்னத் துண்டாக இருந்தாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனேயே சாகாது. அந்த நாக்கிளிப் புழுக்களுக்கு எந்த இடத்திலதான் உயிர் இருக்கோ தெரியாது என நாக்கிளிப் புழுவினைப் பயன்படுத்தி தூண்டில் போடும் அனைவரும் சிந்திப்பதுண்டு. கையில் இருந்த நாக்கிளிப்புழுத்துண்டை எடுத்து பக்குவமாகத் தூண்டில் ஊசியில் குற்றி எச்சிலைத் துப்பி மிதப்பைச் சரிபார்த்து ஆற்றினுள் போட்டார். எச்சில் துப்பினால் விரைவாக மீன் பிடிபடும் என்பது தூண்டில் போடுபவர்களின் நம்பிக்கை.

கொஞ்ச நேரத்தில மிதப்பு மெதுமெதுவாகக் கீழே போனது. 'போகட்டும். நல்லாக் கொண்டு போகட்டும்' என மயில்வாகனத்தார் மனம் சொல்லிக்கொண்டிருந்தது. சடார் என மேலே தூக்கினார் மணலை மீனொன்று துடித்துத் துடித்து தூண்டிலுடன் மேலே வந்தது. கண்ணா மரக் கிளைகளினூடாக வந்து கொண்டிருந்த சூரிய ஒளி அந்த மணலை மீனில் பட்டு தகதகவென வெள்ளியாக மின்னியது. தூண்டல்கள் நுனி பாரம் தாங்காமல் வளைந்துவிட்டது. முறிந்தவிடும் என்ற பயத்திலோ என்னவோ விரைவாக தனதருகில் மீனை எடுத்தக்கொண்டார். மயில்வாகனத்தாரின் முகம் சிரித்தது.

'என்னண்ண தொடக்கமே அமர்க்களமா இருக்கு' சிரிப்பு மாத்திரமே மயில் வாகனத்தாரிடமிருந்து பதிலாக வந்தது. உண்மையில் மயில்வாகனத்தார் மனதால் மகிழ்ந்தார். எப்படியும் முக்கால் கிலோவிற்கு மேல் அதன்நிறை இருக்கும் எனக் கணித்துக்கொண்டார் மயில்வாகனத்தார்.

'அண்ண பாருங்கண்ண'

'என்னத்த'

'இல்ல, அந்த மீன் துடிச்ச துடிப்ப'

'ஏண்டாம்பி'

'இல்லண்ண அந்த மீன் துடியாத் துடிக்குது. நாம ரெண்டு பேரும் மகிழ்றம். அது சாகப் போகுது. நாம மகிழ்ச்சியா சாப்பிடப் போறம். அத எண்ணிப் பாத்தன் அண்ண' "உண்மதான்டாம்பி. உயிரொண்டுட துடிப்பில இன்னுமொரு உயிருக்கு எவ்வளவு மகிழ்ச்சி பாத்தியா இந்த உலகத்தில. அதுதான்டாம்பி வாழ்க்கை. 'இழப்பின்றி பெறுகை இல்லையெண்டு' எனக்கு சொக்கநாதர் ஐயா பள்ளிக்கூடத்தில சொல்லித் தந்தவர் அப்ப. தாவரங்களுக்கும் உயிர் இருக்கு. அதுகளும் துடிதுடித்துத்தான் சாகுற. இரத்தம் வராட்டி அது உயிரில்லை எண்டு சில ஆசாமிகள் புருடா விட்டு தங்களைத் தாங்களே நியாயப்படுத்திற்று மற்றவங்களயும் ஏமாத்திற்று இருக்காங்கடாம்பி. உழைக்காமலே அவங்க வாழுறாங்கள்றாம்பி. நாமதாண்டா ஏழயாப்பிறந்து ஏழயாச் சாகோணும். இப்பபாரன், நாம செத்தா நம்மடசெத்த வீட்டுக்கு எத்தனபேர் வாறாங்க? நம்மட ஊர்ப் போடியார் வீட்ட ஆராவது செத்தா ஊரே திரளும். இதுதாண்டாம்பி உலகம்." மீனை தூண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊசியிலிருந்து கழற்றிப் பிடிக்கும் மீன்களை வழக்கமாகப் போடும் பையினுள் போட்டுவிட்டு அடுத்த மீனைப் பிடிப்பதற்குத் தயாரானார் மயில் வாகனத்தார்.

மயில்வாகனத்தாரின் கருத்துகள் சகாயத்தை சிந்தனையில் ஆழ்த்தியிருக்க வேண்டும். மதியம் வரை இருவரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. ஒன்றரை மணிக்கு இருவரும் சாப்பிட்டார்கள். அரை மணி நேரம் புற்தரையில் சரிந்து படுத்துக்கிடந்து ஆறினார்கள். எழுந்து ஒரு மணி நேரம் தூண்டில் போட்டார்கள். மயில்வாகனத்தாரின் பைக்குள் எப்படியும் மூன்று இறாத்தலிற்கு மேல்தான் மீன்கள் இருக்கும். வழக்கமாக அப்படித்தான் மீன்கள் பிடிபடும். சகாயத்தின் பையில் இரண்டு இறாத்தல் அளவில் மீன்கள் இருந்திருக்கும்.

'அப்ப போயிற்று வாறாண்டாம்பி' 'கொஞ்சம் நில்லண்ண, நாம ஒவ்வொரு நாளும் ரெண்டு மூணு கிலோ எண்டு மீனப் பிடிச்சு அத ரெண்டு ரெண்டம்பது உருபாக்கு வித்து அஞ்சோ ஆறோ வீட்ட கொண்டு போய், எப்பிடிண்ண நாம கொஞ்சமெண்டாலும் முன்னுக்கு வாற?'
'அதுக்கென்னடாம்பி செய்யிற? நாம பிறந்த இடம் அப்பிடிடா. நானும் இவன் ரகீமிட்ட வாங்கின நூற்றியிருபது உருபாக்காசக் குடுக்கேலாம எட்டுமாசமா படாதபாடு படுறன்டாம்பி' அலுத்துக்கொண்டார்.
'அண்ண மலயில கடலுக்க பிறிமா எண்டு கட்டி கூப்பன்மாவ இஞ்சயே செய்யப் போறாங்களாம். அதக் கட்டுறதுக்காண்டி கடலத் தூர்க்கிறதுக்கு பாலம்போட்டாத்தில இருந்துதான் மண் கொண்டுபோகப் போறாங்களாம். கூலிக்கு வேல செய்ய நிரந்தரமா ஆக்கள் எடுக்கப் போறாங்களாம். ஒரு நாளைக்கு பதினொண்டு ஐம்பது தருவாங்களாம் அண்ண' கண்கள் அகல விரியப் பார்த்துக்கொண்டிருந்த மயில்வாகனத்தார் 'இது உண்மயாடாம்பி? எப்பிடிடாம்பி உனக்குத் தெரியுமிது?'
'உண்மதானண்ண, ஆக்களெடுக்கயாமெண்டு நேற்றுக் கூட்டம் வச்சவங்கண்ண. என்ர கூட்டாளிப் பொடியன் சொன்னவன். நானும் போனனான். அங்கதான் சொன்னாங்க'
'அப்ப போவம்டா தம்பி. எப்பிடிப் பதியிற எண்டு கேட்டுச் சொல் பதிவம்.' ஆர்வத்துடன் கண்கள் சிரிக்கச் சொன்னார்.
'நீ ஓம் எண்டு சொல்லுவாதானே எண்டு நினைச்சு ரெண்டுபேரையும் நேற்றுப் பதிஞ்சிற்றன் அண்ண. கேக்காம நீ ஏன் பதிஞ்சனியெண்டு ஒரு வேள ஏசுவியோ எண்டுதான் இவ்வளவு நேரமும் பயந்து பயந்து சொல்லாம யோசிச்சிற்று இருந்தனான் அண்ண' மயில் வாகனத்தாரின் மனது நெகிழ்ந்தது. சகாயத்தின் அருகில் வந்து அவனைக் கட்டியணைத்து முதுகில்தட்டி தனது நன்றியைத் தெரிவித்தவரின் கண்களில், நீர்த்துளிகளாக உருண்டிருந்ததை சகாயம் கண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவாவிற்கு இரண்டு இறாத்தல் மீனைக் கொடுத்துக் கொண்டிருக்கும்போது பக்கத்து வீட்டு சுப்பிரமணியம் வந்து 'ஒரு கிலோ எனக்கும் தாவன் மயில்' என்று கேட்க அவருக்கும் கொடுத்துவிட்டு ஆறு உருபாவினை தனது மேற்சட்டையினுள் திணித்துவிட்டு மிகுதியாக மீன்பையினுள் இருந்த மீன்களை தனது வீட்டுக் கறிக்கென தீர்மானித்து வீட்டிற்குச் சென்றார். 'சகாயத்தின் வேலை முன்மொழிவை' கார்மேகத்துடன் பகிர்ந்து கொண்டார். கார்மேகமும் மகிழ்ந்தாள். நாளையில இருந்து வேலயாம் என்றும் சொன்னார். கிழமைக்கு ஒரு தடவை சனிக்கிழமைகளில் வேலைக்கான கொடுப்பனவைக் கொடுத்தார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்தால் இரண்டு மடங்கு கிடைக்கும். சனிக்கிழமைகளில் ஒன்றரை மடங்கு கிடைக்கும். மயில்வாகனத்தாரும் சகாயமும் முந்நூற்றி அறுபத்தைந்து நாட்களும் வேலை செய்தார்கள். கிழமைக்குக் கிழமை சனிக்கிழமைகளில் தொண்ணூற்றி ஏழு உருபா எழுபத்தைந்து சதம் கொடுத்தார்கள். மயில்வாகனத்தார் கனவிலும் இப்பிடியொரு தொழில் கிடைக்குமென்று நினைத்திருக்கவில்லை. ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் சகாயத்திற்கு நன்றி சொல்வார். சகாயம் மயில்வாகனத்தாரின் குடும்பத்திற்கு கடவுளாகத் தெரிந்தான். முதல் சனிக்கிழமை கொடுப்பனவு கிடைத்தவுடன் மொத்தமாக இவ்வளவு தொகையினை தனது உழைப்பாக ஒரே தடைவையில் தன் வாழ்நாளில் பார்த்திராத மயில்வாகனத்தார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கார்மேகத்திடம் அப்படியே கொடுத்த போது அவளது கண்களிலிருந்து நீர் தாரைதாரையாகக் கொட்டியது. ஏழைகளின் வாழ்க்கை இப்படித்தான். சின்னச்சின்ன மகிழ்ச்சிகள்தான் அவர்கள் வாழ்வில் பெரு மகிழ்சியாகிவிடுகின்றன. 'இஞ்சருங்க இந்தாங்க இந்த தொண்ணூற ரகீம் நானாட்டக் குடுத்திற்று வாங்க. மிச்ச முப்பதயும் அடுத்தகிழம தாறம் எண்டு சொல்லுங்க' கொடுத்தனுப்பினாள். ரகீம்நானாவின் கடன் அடுத்த கிழமை முழுமையாக அடைக்கப்பட்டதோடு இருபது உருபா அதிகமாகவும் கார்மேகம் கொடுத்து விட்டிருந்தாள். தங்களது இயலாமையினால் கரீம் நானாவிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டதனை ஈடு செய்வதற்காகவெனக் கொடுத்துவிட்டாள். ஆனால் 'இது எங்கட மார்க்கத்தக்கு கராம்' எனக் கூறி மறுத்துவிட்டார் கரீம்நானா. மயில்வாகனத்தார் எவ்வளவோ வற்புறுத்தியும் ரகீம்நானா வாங்கிக்கொள்ளவில்லை. விரைவான வளர்ச்சி மயில்வாகனத்தார் வீட்டில் உருவானது. மூன்றுநேர உணவும் மூவரும் உண்டனர்.

2003 வைகாசி பதின்மூன்றாம்நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்தரை மணி

பல்கலைக்கழகப் படிப்பை முடித்து குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராக இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாக இருக்கும் மதிச்செல்வி முற்றத்திலுள்ள அடுப்பில் சீனிமா வறுத்துக்கொண்டிருக்கிறாள். தனது வீட்டு முற்றத்திலே இருக்கும் மாமரத்துக்கக் கீழே கிடந்த சாய்மனைக் கட்டிலில் நரைத்த தலையுடன் படுத்துக்கொண்டு 'இஞ்ச வாடா செல்லக்குட்டி, அப்பாட பேர் சொல்லுடா. உன்ர அப்பாட பேர் என்ன செல்லம்' கொஞ்சலாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டார் மயில்வாகனத்தார் பேரனிடம். 'சகாயம்' மதிச்செல்வியின் இரண்டாவது பிள்ளை தன் மழலை மொழியால் சொல்லிக் கொல்லென்று சிரித்தது. அப்போது கையில் பையுடன் பிறிமாவில் கூலித்தொழிலாளியாக வேலை செய்துகொண்டிருக்கும் நாற்பத்தி யிரெண்டு வயதான சகாயம் வாய்நிறையப் பல்லாக படலையைத் திறந்து வந்து கொண்டிருந்தான்.

சகாயம் மாறவில்லை. அப்படியேதான் இருக்கிறான். ஆனால் மயில்வாகனத்தாரை மட்டும் அண்ணனில் இருந்து மாமாவாக மாற்றியிருந்தான்.


---

சாலைகளை இரவாக்கி கவிந்தன நிழல்மரங்கள்
காலையின் அவசரப் பேருந்துப் பயணம்.
என்னருகில் இருந்த மனிதன் சகுனியேதான்.
அவன் பார்வையின் கவனம்
சாளரங்களூடே வெறித்தபடியிருந்தது.
அவன் அலைவு தர்மன் யாரையும்
தேடுவதாயில்லை.
மார்கழி நாய்களின் புணர்தல் கலவரத்தில்
பேருந்து தரிக்க
சேலைகள் அலைக்கழிந்து கலைய
வழியிறங்கிய திரௌபதைகளை
அவன் கண்டுகொள்வதாகவும் இல்லை.
துரியோதனனின் நிலவரத்தையும் தற்போது
துச்சாதனனின் நடத்தை மாற்றத்தையும்
திருதராட்டினரின் நலம் பற்றியதுமாக
காந்தாரிகள் சலசலக்கையிலும்
ஆர்வமற்றிருந்தான்.
அவனையொத்த பாதி நரைப்பயணி
என்னை பலமுறை பார்த்தும்
துரோக முகத்தை அப்பி
மொழி இழந்தவனாயிருந்தான்.
அவனுக்கு கண்ணனின் சொல்லும்
எல்லோர் இரைச்சலும் கருத்தற்றது.
நடத்துனர் ஓலை வாசித்ததிலிருந்து
அவனது பயணம்
அடுத்து நடந்த
குருசேத்திரம் நோக்கியதாகவோ
அசுவத்தாமனின் மயானம்
நோக்கியோதான் இருக்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயக்கவியல் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்றால் என்ன?

## (கேள்வி-பதில் வடிவில் ஓர் எளிய அறிமுகம்)

**1) தத்துவம் என்றால் என்ன?**

இந்த உலகம் எங்கிருந்து வந்தது? மனிதஇனம் இவ்வுலகில் எவ்வாறு தோன்றியது? வாழ்க்கையின் சாரம் என்ன? இது போன்ற கேள்விகளைப் பற்றிச் சிந்திக்கும் போது தன்னை அறியாமலேயே தத்துவத்தின் அடிப்படைகளைப் பற்றிச் சிந்திக்கின்றனர். இந்தக் கேள்விகளுக்கு எந்த விடையளித்த போதிலும் அதற்கு ஒரு தத்துவத்தின் உட்பொருள் இருக்கும். இவை அவர் சார்ந்திருக்கும் வர்க்கத்திற்குத்தக்கப்படி அமைந்திருக்கும். இவ்வகையில் தத்துவம் சமூக வாழ்வின் பிரதிபலிப்பாகவே திகழ்கிறது.

**2) தத்துவத்தைச் சுருக்கமாக ஒற்றை வரியில் கூறமுடியுமா?**

முடியும். இயற்கை, சமூகம், சிந்தனை இவற்றுடைய வளர்ச்சியின் மிகப்பொதுவான விதிகளைத் தத்துவம் ஆராய்கிறது.

**3) அப்படி என்றால் தத்துவம் என்பது அவ்வளவு எளிதானதா?**

இதில் எளிது, கடினம் என்பதைவிட நமக்குத் தேவையானதா? தேவையற்றதா? என்பதை அறிந்து கொள்ள வேண்டும். தேவையானதை எளிதாகவோ கடினமாகவோ கற்றுத்தான் ஆக வேண்டும். கற்கும்வழி அறிந்தால் எளிதானது. வழி அறியாதவரை கடினமானது. சுருக்கம் எளிமையாகத்தான் இருக்கும். அதனை விரித்துப் புரிந்து கொள்வதற்கு முயற்சி எடுக்கத்தான் வேண்டும்.

**4) இயற்கைப் பற்றியும், சமூகத்தைப் பற்றியும் தத்துவம் என்ன சொல்கிறது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கக் காலத்தில், இயற்கை, சமூகம் என்று தத்துவம் பிரித்து விவரிக்கவில்லை இருந்தாலும் இரண்டையும் விளக்கியிருக்கிறது. இந்த விளக்கம் தத்துவத்தை இரண்டு பிரிவாகப் பிரிக்கிறது

**5) இந்த இரண்டு பிரிவு எது?**

ஒன்று கருத்துமுதல்வாதம் மற்றொன்று பொருள்முதல்வாதம்

**6) இரண்டுக்கும் என்ன வேறுபாடு?**

தத்துவம் எழுப்புகின்ற கேள்விக்கு அளித்திடும் பதிலைக்கொண்டு ஒன்றை கருத்து முதல்வாதம் என்றும் மற்றொன்றை பொருள்முதல்வாதம் என்றும் அழைக்கப்படுகிறது.

**7) அது என்ன கேள்வி--பதில்?**

கடவுள் உலகத்தைப் படைத்தாரா அல்லது மனிதன் தோன்றுவதற்கு முன்பே இருந்து வருகிறதா? படைக்கப்பட்டது என்று பதிலளிப்பவர்கள் கருத்துமுதல்வாதத்தின் பல்வேறு பிரிவினைச் சேர்ந்தவர்கள். இவர்களது விளக்கம் உலகம் ஏதோ ஒரு விதத்தில் படைக்கப்பட்டது என்கிற அனுமானத்தில் இருந்து தொடங்குகிறது. இயற்கைதான் முதன்மையானது என்று கருதுபவர்கள் பொருள்முதல்வாதத்தின் பல்வேறு பிரிவினைச் சேர்ந்தவர்கள்.

**8) இரு பிரிவுகளிலும் பல உட்பிரிவுகள் இருக்கின்றனவா?**

ஆம். கருத்து முதல்வாதத்திலும் பொருள்முதல் வாதத்திலும் பல உட்பிரிவுகள் இருக்கின்றன.

**9) கருத்துமுதல்வாதத்தின் பிரிவுகள் எத்தனை?**

ஒன்று அகநிலை கருத்துமுதல்வாதம் மற்றொன்று புறநிலை கருத்துமுதல்வாதம். அனைத்து கருத்து முதல்வாதங்களும் இவ்விரு பிரிவுக்குள் அடங்கும்.

**10) அகநிலை கருத்துமுதல்வாதம் என்றால் என்ன?**

உலகில் காணப்படும் அனைத்துப் பொருட்களும் மனித உணர்வின் விளை பொருட்கள் என்று அகநிலைக் கருத்து முதல்வாதம் கருதுகிறது. காணப்படும் பொருட்கள் அனைத்தும் மனதின் படைப்பே என்கிறது. அதாவது படைக்கப்பட்ட அனைத்தும் அகத்தினால் தோன்றியதாகக் கருதுகிறது. இத்தத்துவத்தில் புகழ்பெற்ற சிந்தனையாளர்கள் இங்கிலாந்தில் பெர்க்லி, ஆஸ்திரியாவில் மாஹி, இந்தியாவில் ஆதிசங்கரர், ரமணர், விவேகானந்தர் போன்றோர். அகநிலைக் கருத்து முதல் வாதத்தின் நவீன வடிவமாக நேர்காட்சி வாதம், இருத்தலியல், பின்நவீனத்துவம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**11) புறநிலை கருத்துமுதல்வாதம் என்றால் என்ன?**

காணப்படும் உலகம், மனித உணர்வு நிலைக்கு அப்பாற்பட்டதும், வெளியில் இருக்கக் கூடியதுமான முழுமுதற் கருத்தின் விளைபொருள் என்றுரைக்கிறது புறநிலைக் கருத்து முதல்வாதம். பிரபஞ்சம் இவ்வுலகிற்கு அப்பால் உள்ள சக்தியால் தோற்றுவிக்கப்பட்டது. அதாவது படைப்புக்கான சக்தி இவ்வுலகிற்கு அப்பால் காணப்படுகிறது. அதனால்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் இதற்கு அப்பாலைத் தத்துவம் என்று பெயரிட்டு அழைக்கப்படுகிறது. புறநிலைக் கருத்துமுதல்வாதத்தின் புகழ்பெற்ற சிந்தனையாளர்கள், கிரேக்கத்தில் பிளாட்டோ, ஜெர்மனியில் ஹெகல், இந்தியாவில் ராமானுசர், மத்துவர், சைவ சித்தாந்தியான மெய்கண்டர் போன்றோர்கள்.

**12) இதேபோல் பொருள்முதல்வாதத்திலும் பிரிவுகள் இருக்கின்றனவா?**

ஆம் இருக்கின்றன. அதில் முதன்மையானது ஒன்று இயக்கவியல் பொருள் முதல் வாதம் மற்றொன்று இயக்கமறுப்பியல் பொருள்முதல்வாதம்.

**13) இயக்கமறுப்பியல் பொருள்முதல்வாதம் என்றால் என்ன?**

இயந்திரகதிப் பொருள்முதல்வாதத்தையும், பகுத்தறிவுவாத நாத்திக பொருள்முதல் வாதத்தையும் இயக்கமறுப்பியல் பொருள்முதல்வாதம் என்று கூறலாம். மார்க்சுக்கு முன்பான பொருள்முதல்வாதம் இயந்திரகதி தன்மையினைப் பெற்றதாக இருந்தது. இயற்கை, சமூகம் ஆகியவற்றை இயந்திரகதி வழியில் இயங்குவதாக விளக்கியது. இயற்கைப் பற்றிய விளக்கத்தில் இயலுலகிற்கு அப்பால் இருந்து தொடங்காமல், இயற்கையிடம் இருந்தே தொடங்கியது என்ற வகையில் இது முற்போக்கானதே. ஆனால் சமூகமும் இயற்கையும் மாறுதல் அற்றவையாகவும் மாற்ற முடியாதவை யாகவும் விளக்கியது. பகுத்தறிவுவாதம் ஆன்மீகத்தை எதிர்க்கும் வகையில் அது பொருள்முதல்வாதமே. ஆனால் இந்த ஆன்மீகத்தின் தோற்றத்தை மனிதனது சிந்தனையில் கண்டது. அதற்கான புறநிலையை அறிந்து அதனடிப்படையில் போராடாமல், வெறும் அறிவுத்துறை போராட்டமாகச் சுருக்கியது. சிந்தனையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பகுத்தறிவில் கண்டது. பகுத்து அறியப்படுபவை எங்கிருந்து வந்தது என்பதைக் கவனத்தில் கொள்ளவில்லை. கடவுளை மறுத்தலே அறிவுக்கு வழியாகக் கண்டது. கருத்தின் சார்புக்கும், அதன் மாற்றத்திற்கும் காரணமான பொருளாயத புறநிலையைக் கணக்கில் கொள்ளவில்லை. சிந்தனையைத் தர்க்க வழிப்பட்டதாகச் சுருக்கி விளக்கியது.

**14) மார்க்சியம் எத்தகைய பொருள்முதல்வாதம்?**

மார்க்சியம் இயக்கவியல் பொருள் முதல்வாதம் ஆகும். இயற்கையையும் சமூகத்தையும் அறிந்திட முடியும். இவை இரண்டும் நமக்குப் புறத்தே நம்மைச் சார்ந்திடாமல் புறநிலையில் இயங்குகின்றன என்கிறது இத் தத்துவம். பொருள் முதல்வாதம் உலகை உள்ளது உள்ளபடியே காணவேண்டும் என்பதையும், உலகின் பொருளாயத ஒற்றுமையின் அடிப்படையைப் பருப்பொருளின் இணைப்பில் காண வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது. பொருள் முதல்வாத சிந்தனையில் புகழ்பெற்றவை கிரேக்கத்தில் டெமாக்கிரிட்டஸ், இந்தியாவில் சாங்கியம், ஆதிபுத்தர், உலகாயதர், சார்வாகர், அணுவாதம் பேசும் வைசேஷிகர் போன்றோரின் சிந்தனைகள். இயக்கவியல் பொருள்முதல்வாத சிந்தனையாளர்யாளர்களில் புகழ் பெற்றவர் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஜார்ஜ் தாம்சன், இந்தியாவில் தேவிபிரசாத் சாட்டோபாத்தியாயா, கோசாம்பி, ஆர்.கே.சர்மா, நா.வானமாமலை, கோ.கேசவன், இலங்கையில் கைலாசபதி போன்றோர்கள்.

மரபுவழிப்பட்ட பொருள் முதல்வாதத்தின் தொடர்ச்சியே புதிய(நவீன) மார்க்சிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்முதல்வாதம். பழைய பொருள்முதல்வாதத்தில் காணப்படும் குறைகளையும் அதன் இயக்கமறுப்பியல் தன்மையையும் நீக்கி முரணற்ற இயக்கவியல் பொருள் முதல்வாதத்தைத் தோற்றுவித்தது.

**15) இந்த இரண்டு தத்துவப் போக்கிற்கும், அடுத்தப் போக்கு அல்லது நடுப் போக்கு என்று ஏதேனும் இருக்கிறதா?**

தத்துவத்தில் இரண்டு போக்கிற்கு இடையே நடுப்போக்கு என்றும் மூன்றாம் போக்கு என்றும் ஏதும் கிடையாது. தத்துவம் எழுப்பும் கேள்விக்குப் பதில் அளிப்பதில் இருந்து விலகுவதின் மூலம் இந்த நடு, மூன்றாம் போக்கினர் கருத்துமுதல்வாதப் பாதையிலேயே பயணிக்கின்றனர். கதம்பவாதப் போக்கு கருத்து முதல்வாத முடிவுக்கே இறுதியில் இட்டுச் செல்லும்.

**16) கருத்துமுதல்வாதம் சிறந்ததா? பொருள்முதல்வாதம் சிறந்ததா?**

இதற்கு நேரடியாக அல்லாமல் வேறுவிதமாகப் பதிலளிக்கலாம். அதாவது கருத்து முதல்வாதம் தமது வாதத்தை அனுமானத்தின் அடிப்படையில் அமைத்துக் கொள் கிறது. பொருள்முதல்வாதம் அறிவியலை(விஞ்ஞானத்தை) அடிப்படையாகக் கொண் டுள்ளது. அறிவியல்(விஞ்ஞான) வளர்ச்சி குறைந்த காலத்தில் கருத்து முதல் வாதம் சிறப்பைப் பெற்றிருந்தது. ஏன் என்றால் பொருள் முதல்வாதத்திற்குத் தேவைப்படுகிற அறிவியல் வளர்ச்சி அப்போது பெறவில்லை.

**17) அதனால்தான் அன்று கருத்துமுதல்வாதத்தின் கையோங்கியிருந்ததா?**

ஆமாம். இதனை எங்கெல்ஸ் சிறப்பாக விளக்கி இருக்கிறார். சிந்தனைக்கும் பருப் பொருளுக்கும் இடையிலான உறவை தெளிவுபடுத்துவதற்குத் தேவைப்படுகிற அறிவியல் வளர்ச்சி ஏற்படாத அந்தக் காலத்திய பொருள்முதல்வாதம், இயற்கைப் பொருள் முதல்வாதமாகவே இருந்தது. இன்றைய அறிவியல் வளர்ச்சியை எட்டாத அன்றைய நிலையில், இந்தப் பிரச்சினைக்கு உடலில் இருந்து உயிர்(ஆன்மா) பிரிக்கப்படத்தக்கது என்ற போதனைக்கும், பிறகு இந்த உயிருக்கு(ஆன்மாவுக்கு) சாவாத் தன்மையைத் துணிந்துரைப்பதற்கும், இறுதியில் ஒரு கடவுள் கோட்பாட்டிற்கும் கருத்துமுதல்வாதம் வந்தடைந்தது. எனவே பழைய பொருள்முதல்வாதம் அன்றைய கருத்துமுதல்வாதத்தால் நிலைமறுக்கப்பட்டது என்கிறார். அறிவியல் வளர்ச்சியினால் இயக்கவியல் பொருள்முதல்வாதம் இன்றைய நிலையில் கருத்து முதல்வாதத்தை நிலைமறுக்கிறது.

**18) இன்றும் கருத்துமுதல்வாதம் மேலோங்கித் தானே இருக்கிறது?**

ஆம். உண்மைதான். இன்றைய கருத்துமுதல்வாதத்தின் வேர்கள் சமூகச் சூழ்நிலை யில் அடங்கி இருக்கிறது. மனித அறிதலின் போதாமையை புதிய அறிவியல் கண்டு பிடிப்புகள் நீக்கிவிட்டது உண்மையே. ஆனால் சமூகத்தின் வழியிலான அழுத்தம் முதலாளித்துவச் சமூகத்தில் கடுமையாகத் தொடர்கிறது. முதலாளித்துவ உற்பத்தியில் காணப்படும் முரண்களுடைய ஏற்ற இறக்கங்கள் ஏற்படுத்தும் அச்ச உணர்வும் பாதுகாப்பின்மையும் இன்றைய கருத்து முதல்வாதத்தின் வேர்களாகிறது. அச்ச உணர்வே கருத்து முதல்வாதத்தின் பிறப்பிடம். அதனால்தான் பொதுவுடைமை வாதிகளின்(கம்யூனிஸ்டுகளின்) நாத்திகப் போராட்டம் சித்தாந்தப் போராட்டமாகச்



வெறும் வயிறும் வெறும் பணப்பையும் பிரயோசனமான உறவுகளும் பட்டறியப் பட்டறிவைத் தந்துவிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கிவிடாமல், சமூக வேர்களை அகற்றும் போராட்டத்துடன் இணைத்துக் காணப்படுகிறது.

**19) இயக்கவியலுக்கும் இயக்கமறுப்பியலுக்கும் என்ன வேறுபாடு?**

இயற்கையிலோ, சமூகத்திலோ ஒரு மாற்றம் நிகழ்கிறது என்றால் அந்தக் காரியம் கரணியத்தின் தொடர்ச்சியாகவே நடைபெறுகிறது. இந்தக் கரணியக் காரிய இயக்கத்தை அறிவியல்படி விளக்குவது இயக்கவியல் விதியாகும். கரணியக் காரியத்தை மறுப்பது இயக்கமறுப்பியல்.

**20) இயக்கவியல் விதி எவை?**

இயக்கவியலின் பொது விதிகள் மூன்றாகும்.

1. அளவுநிலை மாற்றங்கள் பண்புநிலை மாற்றங்களாக மாறுவது பற்றிய விதி.
(The Law of the Transformation of Quantitative into Qualitative Changes)
2. எதிர்நிலைகளின் ஒற்றுமையும் போராட்டமும் பற்றிய விதி.
(The Law of the Unity and Struggle of Opposites)
3. நிலைமறுப்பின் நிலைமறுப்பைப் பற்றிய விதி
(The Law of the Negation of the Negation)

**21) இந்த மூன்றையும் அறிந்தால் இயக்கவியலை அறிந்து கொள்ளமுடியுமா?**

எல்லா அறிவியல் விதிகளுக்கும் அதற்குரிய வகையினங்கள் (Categories) இருக்கின்றன. அந்த வகையினங்களினுடைய வகைப்பிரிவின் அடிப்படையில்தான் அந்த அறிவியல்களின் விதிகளைப் புரிந்து செயற்படுத்த முடியும்.

**22) இயக்கவியலின் வகையினங்கள் எவை?**

1. தனியானது, குறிப்பானது, சர்வப்பொதுவானது (Individual, particular, Universal)
2. கரணியமும் விளைவும் (Cause and Effect)
3. அவசியமும் தற்செயலும் (Necessity and Chance)
4. உள்ளடக்கமும் வடிவமும் (Content and Form)
5. சாத்தியமும் எதார்த்தமும் (Possibility and Reality)
6. சாராம்சமும் புலப்பாடும் (Essence and Phenomenon)

**23) இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்றால் என்ன?**

இயற்கை, சமூகம், சிந்தனை ஆகியவற்றின் மாற்றத்தை கரணியக் காரியத்துடன் அதாவது அதன் இயக்கப்போக்குடன் விளக்குவது இயக்கவியல். இன்றைய இருப்பிற்கான கரணியத்தையும், நாளை ஏற்படப்போகும் மாற்றத்தையும், அதன் இயக்கவிதியின் அடிப்படையில் கூறப்படுவதால் இயக்கவியல் பொருள் முதல்வாதம் என்றழைக்கப்படுகிறது. மார்க்சிய பொருள்முதல்வாத தத்துவம் தம்முள் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒன்று இயற்கையின் இருப்பைப் பற்றிப் பேசுகிறது. இது இயக்கவியல் பொருள் முதல்வாதம். மற்றொன்று சமூக இருப்பு, வளர்ச்சி, மாற்றத்தைப் பற்றிப் பேசுகிறது. இது வரலாற்றியல் பொருள் முதல்வாதம்.

**24) மார்க்சியப் பொருள்முதல்வாதத்துடன் இணைந்த புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் எவை?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பொருள் முதல்வாதமான மார்க்சியத் தத்துவம், பத்தொன்பதாம் நூற்றாண்டின் புதிய இயற்கை அறிவியல் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொணடு தம்மை நிலை நிறுத்தியது.

1.ஆற்றலின் உருமாற்றம்,

2.உயிரணு,

3.பரிணாமக் கொள்கை ஆகியவை அறிவியலின் மூன்று புதிய கண்டுபிடிப்புகளாகும்.

**2.5) இந்த மூன்று கண்டுபிடிப்புகளும் என்ன முடிவுகளைத் தருகின்றன?**

பொருளும் அதன் இயக்கமும் நிரந்தரமானவை, தோற்றுவிக்கவும் அழிக்கவும் முடியாதவை என்பதை ஆற்றலின் உருமாற்றம் பற்றிக் கோட்பாடு அறிவித்தது. தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் இடையேயான ஒற்றுமை கண்டுபிடிக்கப்பட்டது. அனைத்து உயிரிகளும் ஒரேவித உயிரணுக் கட்டமைப்பைப் பெற்றுள்ளதை உயிரணு பற்றிய கோட்பாடு கண்டறிந்தது. எளிய உயிரினத்திலிருந்து சிக்கலான உயிரினங்களாக வளர்ச்சியடைந்து இருக்கின்றன. இன்றைய உயிரினங்கள் அனைத்தும் தொடக்கத்திலிருந்த ஒற்றை உயிரணுவைக் கொண்ட உயிரிகளிலிருந்து ஏற்பட்ட நீண்ட பரிணாமப் போக்கின் விளைவுகளாகும் என்பதைப் பரிணாமக் கோட்பாடு வெளிக் கொணர்ந்தது. இந்த முப்பெரும் கண்டுபிடிப்புகளின் வழியாக, இயற்கை முழுவதின் இடைத்தொடர்பை எவ்வித அயலான கலப்பின்றி, உள்ளதை உள்ளவாறு புதிய பொருள் முதல்வாதம் அறிந்து கொண்டது. கருத்துமுதல்வாதத்தால் இதுவரை முன்வைக்கப்பட்ட மேலுலகத்தின் அப்பாற்பட்ட தொடர்பு தேவையற்றது என அறிவியல் வழியில் மறுக்கப்பட்டது.

**2.6) இயக்கவியல் பொருள்முதல்வாதம் எவற்றை எல்லாம் விளக்குகிறது?**

குறிப்பாகப் பருப்பொருள், அதன் இயக்கம், விசும்பும் காலமும், உணர்வுநிலை என்பது பற்றிப் பேசுகிறது.

**2.7) பருப்பொருள் என்றால் என்ன?**

பொருள்முதல்வாதக் கண்ணோட்டம், பருப்பொருளை (Matter) அடிப்படையாகக் கொண்டு ஆராய்கிறது. பருப்பொருள் என்பது மனிதனது உணர்வுநிலையைச் சாராது, அதாவது அதனைப் பற்றி மனிதன் சிந்திக்கின்றானா? சிந்திக்கவில்லையா? என்பதைச் சாராது, புறநிலையில் இருக்கிறது. பருப்பொருள் எத்தகைய தனித்தன்மையைப் பெற்றிருந்தாலும் ஒரு பொது அம்சத்தைக் கொண்டுள்ளது. அது நமது உணர்வு நிலையைச் சாராமல், புறநிலையில் இருக்கிறது.

**2.8) பருப்பொருளும் இயக்கமும் என்றால் என்ன?**

உலகில் காணப்படும் அனைத்தும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. முற்றிலும் இயக்கமோ, மாற்றமோ இல்லாத பொருள் என்று சொல்வதற்கு இவ்வுலகில் எதுவும் இல்லை. பருப்பொருளின் இருப்பு என்பது இயக்கத்தில்தான் நிலவுகிறது. இயக்கம் இன்றிப் பருப்பொருள் இல்லை. அதேபோன்று பருப்பொருள் இன்றி இயக்கமும் இல்லை. இயக்கத்திலுள்ள பருப்பொருள் என்பது விசும்பிலும் காலத்திலும் தவிர்த்து வேறு நிலையில் செயற்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**29) விசும்பும் காலமும் (Space and Time) என்றால் என்ன?**

பருப்பொருளின் இயக்கம் என்பது விசும்பிலும் காலத்திலும் நடைபெறுகிறது. விசும்பு என்பது பருப்பொருளின் இருத்தலையும், மற்ற பொருளுடன் கொண்டுள்ள உறவிலும் வெளிப்படுகிறது. காலம் என்பது பருப்பொருள் இருத்தலின் கால அளவிலும், அடுத்தடுத்து தொடர்கின்ற நிகழ்வின் காலவரிசையிலும் காணப்படுகிறது. பொதுவாகப் பருப்பொருள் நீளம், அகலம், உயரம் கொண்டதாக இருக்கிறது. அந்தப் பரிமாணம் எடுத்துக் கொள்ளும் இடத்தின் அடிப்படையில்தான் அப்பருப்பொருள் விசும்பில் இடம்பெறுகிறது. ஆகப் பருப்பொருள் இடத்தைத் தவிர வேறுவகையில் தம் இருப்பை நிலை நிறுத்துவதில்லை. பருப்பொருள் அண்மையிலோ சேய்மையிலோ, இடதோ வலதோ, மேலோ கீழோ, காணப்படுகிற மற்ற பொருட்களுடன் விசும்பில் இருக்கிறது. அதாவது பருப்பொருளின் தொடர்பு என்பது விசும்பில் தான் நிகழ்கிறது. கண்ணில் படும் பருப்பொருளுக்குத்தான் நீளம் அகலம் உண்டு. அதனால்தான் பொதுவாகப் பருப்பொருளுக்கு என்று கூறப்பட்டது. கண்ணில்படாத ஆனால் அதனைக் கருவிகள் மூலமோ மற்றவற்றின் உதவியோடு அறிந்திடும் பருப்பொருட்கள் இருக்கிறது என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். ஒரு பொருளுக்கும் மற்ற பொருட்களுக்கும் இடையேயுள்ள உறவுகள், அப்பொருட்களைச் சுற்றிலும் நடைபெறும் உறவுகளோடு விசும்பின் உறவுகளாகின்றன. இந்த உறவுகள் எல்லையற்றவை. இதன்படி எல்லைக்குட்பட்ட வடிவமாக இருந்து கொண்டே எல்லையற்ற நிலைக்கு விரிந்து சென்று வரம்பற்ற நிலையை வெளிப்படுத்துகிறது. இது காலத்துக்கும் பொருந்துகின்றது. குறிப்பிட்ட பொருளின் நிலைப்பாட்டின் தொடக்கமும் இறுதியும் இருக்கிறது. ஆனால் இதன் தொடக்கத்துக்கு முன்பே எண்ணிலடங்கா தொடர்ச்சிகள் இருந்து மறைந்துள்ளன. அதே போல் குறிப்பிட்ட பொருளின் முடிவுக்குப் பின்பும் தொடர்கிறது. ஆக இந்தத் தொடர் நிகழ்வுக்குத் தொடக்கமும் இறுதியும் இல்லை. விசும்புமும் காலமும் என்றென்றும் வரம்பின்றி நிலைத்திருக்கிறது.

**30) உணர்வுநிலை (Consciousness) பற்றிக் கூறுங்கள்?**

உணர்வுநிலையைக் கொண்டே மனிதன் தமது செயல்களை அமைத்துக் கொள்கிறான். அதனால்தான் தத்துவ விவாதங்களில் உணர்வுநிலை முதன்மை இடம் பெறுகிறது.

**31) உணர்வுநிலையைக் கருத்துமுதல்வாதமும் பொருள்முதல்வாதமும் எவ்வாறு பார்க்கிறது?**

கருத்துமுதல்வாதம் உணர்வுநிலை எவ்வாறு தோன்றியது என்பதை ஆராயாமல் மனிதனது மூளையின் செயற்பாடாக மட்டுமே பார்க்கிறது. பொருளாயத உலகோடு ஏற்படுகிற பரஸ்பர வினையினால் உண்டான மூளையின் பிரதிபலிப்பாகப் பொருள் முதல்வாதம் பார்க்கிறது. மனிதன் தன்னைச் சுற்றி நடைபெறுவதைப் பார்த்திடும்போது ஏற்படுகிற விழிப்புநிலையில் இருந்து உணர்வுநிலை தோன்றுகிறது. அதாவது தனது வாழ்நிலையில் இருந்து தமக்கான உணர்வுநிலையைப் பெறுகிறான். புறநிலை உலகின் அகநிலைப் பிரதிபலிப்பே உணர்வுநிலை என்கிறது பொருள்முதல்வாதம்.

**(நன்றி — 'மார்க்கிய தத்துவம்' இணையம்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வம்

கரக்கடப்பொடியன்.

வெண்குதிரை நான்கு
பூட்டிய இரதம்
தங்கவடம்
தங்க குடம்
தாமரையில்
அமர்ந்திருக்கும்
முத்தும் மூக்குத்தியும்
அணிந்த நங்கை
தாமரை வெள்ளையா?
கரத்தில் வீணையா?
உற்றுப் பார்க்கிறேன் செந்தாமரை!
வீணை இல்லை!

மகிழ்ந்து
பணிந்த எனக்கு
உயர்த்திய
உள்ளங்கையிலிருந்து
தங்க நாணயம்
தலையில் விழ
விழித்தேன்.

ஓலைக் கூரையின்
ஓட்டையின் ஊடே
தூரத்து வானத்தில்
துருவ நட்சத்திரம்
நல்ல வேளை
இன்று மழைநாள்
இல்லை.



# காலம் காணாத காதல்

கந்தவனம் கோணேஸ்வரன்

காலமதைக் காண்பதில்லை
காதலரின் அன்பு
சீலமொன்றே சிந்தையிலே
சிறக்கின்ற பண்பு.

இளமையிலே தோன்றிடினும்
இறுதிவரை கூடவரும்
வளமைமிகு வாழ்வளித்து
வருதுயரைப் போக்கிவிடும்.

நரைதிரைகள் தெரிவதில்லை
நல்லோர்தம் நெஞ்சத்திலே
வரையறைகள் ஏதுமில்லை
வாழ்க்கையெனும் மஞ்சத்திலே.

உள்ளங்கள் நிறைவதிலே
உருவாகும் நெறிமுறைகள்
கள்ளமிலாச் சிரிப்புக்குக்
கனிவாகும் பொறிமுறைகள்.

இறுதிமூச்சு உள்ளவரை
இதயங்கள் இணைந்திருந்தால்
உறுதியது வாகுமன்றோ
உயர்மாந்தர் வாழ்வினிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் – 02



# 13ஆவது திருத்தச் சட்டம்....

முனைவர்.இ.ஸ்ரீ ஞானேஸ்வரன்

13ஆவது திருத்தச் சட்டமானது ஸ்ரீலங்காவின் நடைமுறையிலிருந்த ஒற்றையாட்சி அரசியலமைப்பின் ஒரு பகுதியாகவே உருவாக்கப்பட்டது. அத்துடன் உருவாக்கப்பட்ட மாகாணசபைகள் சட்டமும் விதிவிலக்கானது அல்ல. அச்சட்டமும் இவ் ஒற்றையாட்சி அரசியலமைப்புச் சட்டத்தினுள் பிரயோகிக்கத்தக்கதாகவே உருவாக்கப்பட்டது. ஸ்ரீலங்கா வின் ஒற்றையாட்சி அரசியலமைப்புச்சட்டமானது 1972 இல் உருவாக்கப்பட்டு 1978 இல் திருத்தப்பட்ட போதும் அதனது ஒற்றைாட்சிப் பண்பானது மாற்றப்படவில்லை. அதனை உறுதிப்படுத்தும் முகமாக அரசியலமைப்புச் சட்டத்தின் அகவிதி 2 ஸ்ரீலங்காவானது ஒற்றையாட்சியுடையது என்பதை வரையறுக்கின்றது.

ஒற்றையாட்சிப் பண்புகொண்ட அரசியலமைப்பில் அதிகாரங்களை பகிர்வது (Devolution) சாத்தியமற்றது. அதிகாரங்களைப் பரவாலாக்குவதையே (Decentralization) ஒற்றையாட்சி அங்கீகரிக்கின்றது என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அதிகாரங்களைப் பகிர்வதற்கும் பரவலாக்குவதற்கும் இடையிலான மிகப்பெரும் வித்தியாசம் இந்த இரு சொற்களையும் ஒன்றிற்கு மாற்றீடாக மற்றையதைப் பாவிப்பதைத் தடைசெய்கின்றது.

அதிகாரப் பகிர்வென்பது அதிகாரங்களைக் கொண்ட மத்திய நிலையமானது நிரந்தரமாகத் தனது அதிகாரங்களை மற்றொரு அதிகார அலகிற்கு பாராதீனப்படுத்தி அந்த பாராதீனப்படுத்தப்பட்ட அலகின் ஊடாக அதிகாரங்கள் பிரயோகிக்கப்படுவதை மேற்பார்வை செய்வதனைக் குறிக்கும். இங்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அலகானது எந்தச்சந்தர்ப்பத்திலும் தன்னிச்சையாக மீளப்பெற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு மீளப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பாராதீனப்படுத்தப்பட்ட அலகின் முழுமையான விருப்பத்தின் பேரிலேயே மீளப்பெற்றுக்கொள்ள முடியும். மாறாக அதிகாரப் பரவலாக்கம் என்பது அதிகாரங்களைத் தன்னகத்தே குவித்து வைத்துள்ள மத்திய அலகானது தான் விரும்பும் அதிகாரங்களை மற்றொரு அலகிற்கு பாரப்படுத்தாது அம்மற்றைய அலகின் ஊடாக பிரயோகம் செய்வதைக் குறித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கின்றது. இங்கு அதிகாரங்களின் மீதான பற்றுகை எந்தச் சந்தர்ப்பத்திலும் மத்திய அலகிடமே இருக்கும் என்பதைக் கருத்திற் கொள்வதுடன் மற்றைய அலகிற்கு பிரயோகத்திற்காக மட்டும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் தன்னிச்சையாகவே மீளப் பெற்றுக்கொள்ளும் வலுவை அம்மத்திய அலகே கொண்டிருக்கும் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஒன்றையாட்சிப் பண்பென்பது அதிகாரப் பரவலாக்கதிற்கான பண்பேயொழிய அதிகாரப் பகிர்விற்கான பண்பல்ல.எனவே 13 ஆம் திருத்தமாக இருக்கட்டும் அல்லது மாகாண சபைச்சட்டமாக இருக்கட்டும் அல்லது இனி ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் எதிர் காலத்தில் உருவாக்கப்படப்போகின்ற எந்தவொரு சட்டமாக இருக்கட்டும் அவை அதிகாரப்பரவலாக்கத்தை மட்டுமே நிகழ்த்த முடியும் என்பதை வாசகர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும். இதனைச் சரியாகப் புரிந்துகொண்ட அன்றைய தமிழ்த் தலைமையான தமிழர் விடுதலைக் கூட்டணி 01.12.1985 இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் நிகழ்வதற்கு முன்பாகவே அப்போதைய இந்தியப் பிரதமர் ரசீவ்காந்தியைச் சந்தித்து அதிகாரப்பகிர்விற்கான தமது முன்மொழிவுகளின் முதல் முன்மொழிவாக அல்லது ஶ்ரீலங்கா "இலங்கை" ஆனது அரசுகளின் கூட்டாக இருக்கவேண்டும். இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களின் விருப்பமின்றி அவற்றின் ஆளுகைப்பரப்பில் எவ்வித மாற்றங்களும் செய்யப்படலாகாது (Sri Lanka – Ilankai- being a nation of states; Amalgamated Northern and Easten Provinces, whose territory cannot be changed wit out its consent.) என்பதை வலுவாகத் தெரிவித்திருந்தனர்.

இங்கு குறிக்கப்பட்ட "அரசுகளின் கூட்டு" என்பது ஒற்றையாட்சிக்கு எதிரான கூட்டாட்சிப் பண்பு என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். ஒற்றையாட்சி என்பது மத்தியப் படுத்தப்பட்ட சுயநிர்ணயத்துடன் வலு முழுவதையும் தன்னகத்தே கொண்ட ஓர் இறுக்கமான கட்டமைப்பாக இருக்க அரசுகளின் கூட்டானது இரண்டு அரசுகளிடையே சுயநிர்ணயத்தையும் அதிகாரத்தையும் பகிரும் அமைப்பாக இருக்கின்றது. இங்கு பகிர்வின் அளவுகள் மாறுபட கூட்டாட்சியின் வடிவங்களும் மாற்றமடையும் என்பதை நாம் காண்கிறோம். வாசகர்கள் அதனைப் புரிந்துகொள்ள ஐக்கியராச்சியத்தின் கூட்டாட்சிப் பண்பையும் இந்தியாவின் கூட்டாட்சிப் பண்பையும் ஒப்பு நோக்குவது உதவி செய்யலாம். இங்கு முக்கியமாக கருத்திற்கொள்ள வேண்டிய விடயம் ஒற்றையாட்சியும் கூட்டாட்சியும் இணைந்த அரசியலமைப்பை உருவாக்க முடியாது என்பதே. அவ்வகையில் கடுமையான ஒற்றையாட்சிப் பிரயோகத்தின் வழி நடாத்தப்படும் ஶ்ரீலங்காவில் அரசியலமைப்பிலேயே 13ஆவது திருத்தச்சட்டம் உள் வாங்கப்பட்டிருப்பதை நாம் ஆழமாகக் கருத்திற்கொள்ள வேண்டும். இவ் ஆழமான கருத்தை உள்வாங்கிக்கொள்வோமாக இருந்தால் 13ஆவது திருத்தச் சட்டத்தின்படி பரவாலாக்கப்பட்டதாக கூறப்படும் எந்தவொரு அதிகாரத்தையும் மத்திய அரசானது தன்னிச்சையாகவே மீளப்பெற்றுக்கொள்ளும் என்பதனைப் புரிந்து கொள்ள முடியும். இதனை மீள வலியுறுத்தும் வகையிலேயே "13 ஆம் திருத்தச் சட்டத்தின் அரசியலமைப்புச் செல்லுபடித்தன்மை" தொடர்பாக மீயுயர் நீதிமன்றமானது தனது தீர்மானத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தியிருந்தது. இதனை அரசியலமைப்புச் சட்டத்தின் 121 ஆவது அகவிதி வலியுறுத்துகின்றது என்பதும் இங்கு கருத்திற்கொள்ளத்தக்கது.

ஸ்ரீலங்காவின் அரசியலமைப்பானது ஒரு தொன்மையான (Archetypal) வடிவத்தைக் கொண்டது. இத்தொன்மையான வடிவத்தின்படி ஸ்ரீலங்காவின் அதிகார மூலங்களாக அதாவது அதிகாரத்தைத் தன்னகத்தே கொண்டவையாக மூன்று மூலங்களை வரையறுத்துக் கொள்ளலாம். அவை முறையே.

1. சட்டமியற்றும் அதிகாரம்
2. நிறைவேற்று அதிகாரம்
3. நீதி அதிகாரம்

இதனை ஸ்ரீலங்காவின் அரசியலமைப்புச் சட்டத்தின் அகவிதி 4 தெளிவாக வரையறுக் கின்றது. ஆகவே ஸ்ரீலங்காவில் அதிகாரங்களைப் பகிரவேண்டுமாயின் அதிகாரத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள இம் மூன்று மூலங்களில் இருந்தும் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். இப்பிரதான மூலங்களில் தேங்கியிருக்கின்ற அதிகாரங்களைப் பகிரத்தக்க வகையில் அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும். அவ்வாற அரசியலமைப்பு மாற்றப் படுமாயின் அவ்வகை அரசியலமைப்பானது கூட்டாட்சிக்கான அரசியலமைப்பாக மாறிவிடும். எனினும் ஸ்ரீலங்காவின் 1972 மற்றும் 1978 அரசியலமைப்புக்கள் மேற் சொல்லப்பட்ட பிரதான அதிகார மூலங்களில் இருந்து அதிகாரத்தைப் பகிரும் வகையில் உருவாக்கப்படவில்லை. இதுவே இனப்பிரச்சனைக்கும் அறவழி அல்லது அரசியல் வழிப் போராட்டங்கள் உருவாகவும் வழிவகுத்ததோடு அவற்றின் பிறழ்வுகள் தமிழர்களை ஆயுதமேந்திப் போராட வழிவகுத்தன என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

தொடரும்......



# ஆறிலிருந்து அறுபதுவரை

**கிண்ணியா பீனா**

கல்வியைத் தேடிடுமாசையில்
ஆறிலே புறப்படும் மொட்டுக்கள்,
மலர்ந்து மணமிட்டுக் களமாடிடும்!
அறுபதிலே சுருங்கிய மேனியுடன்!
ஆறுதலாய் அமர்கையில் அன்பினில்
ஆழ்ந்திட அதிகமாய் ஆசையெழும்!

ஆலமரமதன் விழுதுகளாய்த் தாங்கிடும்
சந்ததிகளின் சரசங்கள் சந்திப்பின்,
அறுபதிலும் ஆனந்தம் பெருகிடுமே!
மழலை அகவையின் பராமரிப்பு
முதுமையில் கிடைப்பது அருமையே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செருக்குப்பு மனிதர்கள்

**சத்தியப்பிரபா**
**கடற்கரைச்சேனை**

மூன்றாண்டுகள் ஒன்றும்
அத்தனை பழமையானதல்ல
பாத ரேகை படிந்த
அந்தச்செருப்புக்கு
நன்றாகவே பசி தெரியும்
அதற்கு நிராகரிப்புக்கள் தெரியும்
அது அவமானங்களின்
சாலை வழியே
அதிகம் பயணித்திருக்கிறது
அது ஆற்றாமையில்
அறுந்திருக்கிகிறது
ஏமாற்றங்களால் தேய்ந்திருக்கிறது.
அது வசவுகளால்
பலநாள் வயிறு நிறைத்திருக்கிறது
திடீர் கர்ணர்கள் அதை
புகைப்படமும் எடுக்கச்செய்தார்கள்.
இப்படி பலநூறு கதைகள் உண்டு
ஒவ்வொரு பிச்சைக்காரனின்
செருப்புக்குப் பின்னாலும்.






இரவலன் ஒருவனின் இராக்கனவு
புரவலனாய் வாழ புலர்ந்திட்ட உணர்வு
அகிலம் அசந்த அந்த சமயம்
அவன் ஆசையோ தொட்டது இமயம்

மாளிகையென மதில் சூழ்ந்த இல்லம்
கேளிக்கை தனில் களிப்படைந்த உள்ளம்
பட்டாடை அணிந்து பஞ்சணையில் உறக்கம்
திட்டாமல் காட்டும் திருமகளின் இரக்கம்

பவளம் முத்து பதித்திட்ட பொன்னகை
கவலை மறந்து உதிர்த்திடும் புன்னகை
சோற்றோடு சேர்ந்து உருப்பெற்ற யாக்கை
நூற்றாண்டு வாழ நோயற்ற வாழ்க்கை

செல்வம் எனும் கடவுளின் வரம்
கனவு மெய்ப்பட்ட வாழ்க்கையே தரம்
உறங்கும் விழிகளுக்குள் உறங்கிடா நினைவு
பிச்சையெடுப்பவனின் ஒரு நாள் கனவு


தெரு நடுவில் கிடக்கும் கல்லை தெருவோரம் ஒதுக்கும்போது, பார்க்கும் பிள்ளை உலகம் உணரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இலங்கை சிற்றிலக்கிய வரலாற்றில் "நீங்களும் எழுதலாம், ஓசை" ஆகியவற்றின் பங்களிப்பு!

-ஏ.ஸீ.எம். முஸ்இல் -

இலங்கையின் சிற்றிதழ் வரலாறு சுதந்திரத்துக்கு முன்பிருந்து ஆரம்பிக்கின்றது. இலங்கையின் பல்வேறு பாகத்திலிருந்தும் பல்வேறு சிற்றிதழ்கள் காலத்துக்கு காலம் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றில் சில தொடர்ந்து வெளிவருகின்ற நிலையில் பெரும் பாலானவை ஒரு சில இதழ்களோடு தமது பயணத்தை நிறுத்திக் கொண்டுள்ளன.

எது எப்படி இருந்த போதிலும் இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சிற்றிதழ்களின் பங்கு அளப்பரியன. திருக்கோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை பல சிற்றிதழ்கள் தோற்றம் பெற்றிருந்தாலும் நீங்களும் எழுதலாம், ஓசை ஆகியன பல இதழ்கள் வரை தமது பயணத்தை தொடர்கின்றன. அந்த வகையில் இந்த இரு சிற்றிதழ்கள் தொடர்பான ஓர் அறிமுகத்தை தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நீங்களும் எழுதலாம்

திரு.எஸ்.ஆர்.தனபாலசிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் கவிதைச் சிற்றிதழ் நீங்களும் எழுதலாம் ஆகும். யாழ்ப்பாணம் வடமராட்சியைப் பிறப்பி டமாகக் கொண்ட,வர் தற்போது திருகோணமலையை வசிப்பிடமாகக் கொண்டுள்ளார். 2007 இல் 'நீங்களும் எழுதலாம்' என்ற கவிதைச் சிற்றிதழை இவர் ஆரம்பித்தார். இரு மாதங்களுக்கொரு முறை வெளிவரும் இவ்விதழ் சில தடைகள், தடங்கல்களைத் தாண்டி இன்றும் வெளிவருகின்றது. இதன் 29வது இதழ் இவ்வாண்டு வைகாசி ஆனி இதழாக வெளிவந்துள்ளது.

இளங்கவிஞர்கள் முதல் எண்பது வயதுள்ளவர் வரை பலர் 'நீங்களும் எழுதலாம்' கவிதைச் சிற்றிதழில் கவிதைகள் எழுதியுள்ளனர். எழுதியும் வருகின்றனர். சில பேராசிரியர்களது கவிதைகளும் இந்தச் சிற்றிதழில் வெளிவந்துள்ளன. திருகோணமலையில் இருந்து நீண்ட காலமாக வெளிவரும் கவிதைச் சிற்றிதழாக நீங்களும் எழுதலாம் தடம் பதித்துள்ளது. பல இளங்கவிஞர்களை இச்சிற்றிதழ் இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. ஆங்கிலம் - தமிழ் மொழிகளில் கவிதைகளை மொழிபெயர்த்து வெளியிடும் ஓர் இதழாகவும் நீங்களும் எழுதலாம் திகழ்கின்றது. ஏறத்தாழ 400 கவிஞர்களின் கவிதைகள் இதுவரை இச்சிற்றிதழில் வெளிவந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பன்னிரண்டு இதழ்களின் தொகுப்பு "நீங்களும் எழுதலாம் பாகம் 1" என்ற பெயரில் வெளிவந்துள்ளது. 2011 இல் நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தை இவர் உருவாக்கினார். இந்த வாசகர்வட்டம் மூலம் கவிதையும், கவிஞனும் என்ற பெயரில் கவிஞர்களின் உரையாடல் தொகுப்பு வெளிவந்துள்ளது.

இலக்கியக் கூட்டங்கள், இலக்கியக் கலந்துரையாடல்கள், நூலறிமுகம், நூல் வெளியீடு, கவியரங்கம், அஞ்சலிக் கூட்டங்கள் எனப் பல இலக்கிய நிகழ்வுகள் என்பன இந்த வாசகர் வட்டம் மூலம் நடத்தப்பட்டுள்ளன. தற்போதும் இயங்குநிலையில் உள்ள ஓர் அமைப்பாக இந்த வாசகர் வட்டத்தைக் குறிப்பிடலாம்.

ஓசை

சுமார் ஐம்பது ஆண்டுகள் எழுத்துத்துறைப் பட்டறிவைக் கொண்ட மூதூரைச்சேர்ந்த ஜனாப். அபூசாலிகு மீராமுகைதீன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் கவிதைச் சிற்றிதழ் "ஓசை" ஆகும். இது காலாண்டு கவிதைச் சிற்றிதழ். 2005 இல் முதல்இதழ் வெளிவந்தது. இதுவும் தடைகள், தடங்கல்கள் பலவற்றைத் தாண்டி வெளி வந்திருக்கின்றது. இதுவரை ஓசையின் இருபத்தியெட்டு இதழ்கள் வெளிவந்துள்ளன. திருக்கோணமலை மாவட்டத்தில் திருகோணமலை நகருக்கு வெளியே நீண்ட காலமாக வெளிவரும் கவிதைச் சிற்றிதழாக ஓசை தடம் பதித்துள்ளது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தினால் மூதூர் வெகுவாகப் பாதிக்கப்பட்டி ருந்தது. அவ்வாறான சூழ்நிலையிலும் காலம் தப்பினாலும் ஓசை வெளிவந்தமை குறிப் பிட்டுச் சொல்லக் கூடிய விடயமாகும். பல இளங்கவிஞர்களின் கவிதைகளைப் பிரசுரித்து அவர்களை ஊக்குவிக்கும் பணியை ஓசை செய்து வந்துள்ளது. அதேபோல நாடளாவிய ரீதியில் உள்ள கவிஞர்கள் பலரின் கவிதைகளையும் தாங்கி வந்துள்ளது. ஓசையில் வெளிவந்த நூறு கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கிய கவிதைத் தொகுப்பு 'சங்கமம்' என்ற பெயரில் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் இலக்கியப் பெருந்தகைகளுள் ஒருவரான வ.அ. இராசரத்தினம் அவர்களை நினைவு கூருமுகமாக அவரது புகைப்படத்தை அட்டைப்படமாகக் கொண்டு அவரைப் பற்றிய ஆக்கங்களைத் தாங்கியதாக ஓசை வெளிவந்துள்ளது. அதேபோல கவிஞர் அல்லாமா இக்பால், விஞ்ஞானியும், இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியுமான அப்துல் கலாம் போன்றோரின் புகைப்படங்களை அட்டைப்படமாகக் கொண்டு அவர்களது தகவல்களை உள்ளடக்கியும் ஓசை வெளிவந்துள்ளது.

முடிவுரை

எனவே, இந்தத் தகவல்களை மையமாகக் கொண்டு நோக்குமிடத்து இலங்கையின் சிற்றிதழ் வரலாற்றில் நீங்களும் எழுதலாம், ஓசை ஆகியன கனிசமான பங்களிப்பை வழங்கி வருகின்றன என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசரீரி நினைத்திருந்தால்

டி. ரவிகாந்தன்


இராவணன் வீழ்த்தப்பட்டபோதே
அசரீரி ஒலிக்கிறது
"தமிழ் நீ நல்லவரின் விம்பத்தினாலே
வஞ்சிக்கப்படுவாய்"

அக்கனத்தில் தமிழ்
புத்தரை நினைத்திருந்தால்

தன் ஆன்மா அடக்கிய
ஆசைகளை எல்லாம் நாளை
தன் விம்பம் அடைந்தே
தீரும் என்று புத்தர்
நினைத்திருந்தால்
தரையில் அமர்பவர்கள்
தவறி விழமாட்டார்கள் என்று
தத்துவம் சொன்ன புத்தரை
மகாவம்சம் மலையேற்றும்

என்ற ஞானம் அன்றே பிறந்திருந்தால்
நல்லவர் எல்லாம்
புத்தராகிக் கொண்டு சென்றால்
நாங்கள் மட்டும் என்ன
செய்வதென்று
போதிகள் போதை கொண்டு
தங்களை புதைக்கும் என்று
அப்பாவிப் பனைகள் நினைத்திருந்தால்

தொடர்ந்தும் இரவு இரவாய் மலை ஏறும் தன்
அமைதியின் ஒளிவட்டம் தொலைந்து
போகும் என்று புத்தர் நினைத்திருந்தால்
அவர் யசோதரையுடனே
வாழ்ந்து விட்டு போயிருக்கலாம் !



# இவள் '?' யா!

ஹினாயிம்
சம்மாந்துறை


உன் நெற்றிப் பொட்டிலிருந்து —
ஆரம்பிக்கிறேன்
காதோடு நாடிக் குழிவரை
உன் தொண்டைக் குழியை —
முற்றுப்புள்ளியாக்கி
முடிக்கிறேன்
நீ என்றும் வினாக்குறியா !!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி மொழியாகிவிட்ட ஏழுசுரம்(ஸ்வரம்)



**சிவா முருகுப்பிள்ளை**

ஈஸ்வரமூர்த்தி

இதனைவிடச் சிறந்த சொல்லாடலை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. இசை மொழியால் எம்மைக் கட்டிப் போட்ட அந்த மனிதனை வேறு எப்படி குறியிடுவது?

இன்று இசையே அழுகின்றது...
தமிழ் இசையே அழுகின்றது....
ஏன் இந்திய இசையே அழுகின்றது.... என்பதே சரியான வார்த்தையாக இருக்க முடியும்.
இசைக்கருவிகள் நிதானமிழந்து நிற்கின்றன.
இசைக்கூடங்கள் இருட்டாகிக் கிடக்கின்றன.
இராகங்களில் முகாரி இராகம் மட்டும் உயர்ந்த இடத்தில் நின்று கூக்குரல் இடுகின்றது..

அவரின் வீட்டின் முன்னால் பெரும் தொற்றையும் மீறி அவரை போற்றும் மக்கள் கூட்டம். வானமும் பொழிந்தமழை தன்பாங்கிற்கு வெள்ளமாய் ஓட அது மக்களின் கண்ணீரால் எற்பட்ட வெள்ளமா...? மழைநீரால் ஏற்பட்ட வெள்ளமா...? என்று பிரித்துக் காண முடியாத சோகம் தமிழ்நாட்டின் சென்னை மாநகரத்தில் மட்டுமா...? இல்லை உலகம் பூராகவும். இரவு பகல் வேறுபட்டாலும் உணர்வுகளில் ஒன்றாக அவரின் இரசிகர்கள் தம்மை இழந்ததான வலிகளில்.... இவை பாடகர், இசையமைப்பாளர் பாலசுப்பிரமணியத்தின் சாவின்போது நிகழ்ந்தவை. ஒருபாடகனுக்கு, கலைஞனுக்கு, பண்பாளனுக்கு, மனிதனுக்குக் கிடைத்த அங்கீகாரமாக இதனை நாம் பார்க்கமுடியும். எமக்கெல்லாம் அறிமுகமான 'ஆயிரம் நிலவே வா...." பாலசுப்ரமணியம் இதற்கு முன்பு வேற்று மொழிகளிலும், வெளிவராத தமிழ்த்திரைப்படங்கள் சிலவற்றில்



பட்டறிவைப் பயன்படுத்தி மழைவருமுன் வடிகால் வெட்டப் பிள்ளைக்குப் பழக்கிவிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியிருந்தாலும் பாடல்கள் சிறப்பாக அமையும் எம்.ஜி.ஆர் அவர்களின் அடிமைப் பெண் திரைப்படத்தில் 1969 இல் பாடிய 'ஆயிரம் நிலவே வா..." ஓர் அங்கீகாரத்தைத் தமிழ் இரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது.

பொறியியல்கல்லூரி மாணவனாக இருந்த காலத்திலேயே இசையில் ஈடுபட்டு 'மதராஸ் பிரசிடென்சி என்று பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் அழைக்கப்பட்ட திராவிட மாநிலத்தில் நெல்லூரில் பிறந்தவர் எஸ்பிபி. இசைமீது இருந்த ஆர்வத்தினால் பொறியலாளராக பட்டம் பெற்றபின்பு திரையிசையில் தனது முழுக் கவனத்தையும் செலுத்தி இந்தியளவில் அதிக அங்கீகாரத்தைப் பெற்ற பாடகராக இந்த 74 வயதிலும் மிளிர்வதற்குள் தன்னை உள்ளாக்கிக் கொண்டார். சொற்பொழிவுகளின் இசைப் பிரவாகத்தில் இவரின் தந்தையின் ஈடுபாடும்... செயற்பாடும்... இவரையும் இசையிற்குள் இழுத்து வந்ததில் ஆச்சரியமில்லை. அது அவரின் சகோதரி சைலஜா, தனதுமகன் சரண் என்று இன்று வரை பயணப்படுகின்றது.

திரையிசைப் பாடல்களில் அதிகம் சுயமாக சங்கதி வைத்து பாடுவதில் தனக்கே உரிய பாணியை அமைத்துப் பாடலுக்கு பாடல் வித்தியாசம் காட்டிப் பாடுவதில் இவருக்கு இருக்கும் வல்லமை... திறமை... இதேமாதிரியான திறமைகளைக் கொண்டிருக்கும் ஜானகி அம்மாவுடன் இணைந்து அதிகமான பிரபல்யமான பாடல்களைக் கொடுத்திருப்பதில் வியப்பேதும் இல்லை.

இந்தப் புதுப்புது சங்கதி வைத்துப்பாடும் இவரின் பாங்கு 'சுப்பர் ஸ்ரார்' ரஜனியின் திரைப்படங்களின் கதாநாயக அறிமுகப் பாடல்களைத் துள்ளலுடன் தொடர்ந்துபாட வைப்பதற்கும் இதன் மூலம் இரசிகர்களை படத்திற்குள் 'கவர்ந்து' இழுத்துச் செல்வதற்கும் கரணியமாக இருந்து வருகின்றன என்பது அத் திரைப்படங்களின் வியாபார ரீதியான வெற்றிகள் நிறுவி நிற்கின்றன.

கமலஹாசனின் காதல்ததும்பும் இளைஞர்களை இழுத்துப் போட்ட பலதிரைப்படக் காதல் சோடிப்பாடல்களை இவரை விடச் சிறப்பாக யாரும் பாடியிருக்க முடியுமா...? என்று கேட்கும் அளவிற்கு இருந்ததும் உண்மைதான். ஒரு சங்கராபரணம்... அதில் பாடியுள்ள அத்தனை பாடல்களும் மொழிகடந்து அனைவரையும் இவர் சங்கீத மேதைதான் என்ற அங்கீகாரத்தை வாங்கிக் கொடுத்து அது மஞ்சுபார்கவியையும், சோமயாஜுலுவையும் விஞ்சியே இருந்தன. மூச்சுவிடாமல்..? பாடும் '...மண்ணில் இந்த காதல்..." என்ற பாடல் இவரின் உடலை(சரீரத்தை) மீறிய சாரீரத்தைக் கொண்டிருப்பதாக இரசிகர்களை நம்ப வைத்தது. கூடவே இவரின் உடலை(சரீரத்தை) மிஞ்சிய காதல் சமாச்சாரம் இவரிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு என்று நடிப்பையும் அங்கீகரிக்க வைத்தது. 'மலரே மௌனமா..." பாடலை நான் கேட்டதும் எனக்குள் நினைத்தேன் இனிச்செத்துவிட வேண்டும் என்று...? அவ்வளவிற்கு இதற்கு அப்பால் ஒருசிறந்த பாடலைக் கேட்கவே முடியாது என்று உருகியே போனேன்.

பலகாதலர்களையும் மீண்டும் மீண்டும் இழுத்து அணைத்துக் கொள்ளுங்கள் என்று உருக்கிய பாடல் அது. 'கொன்னு போட்டார்கள்" இந்தப் பாடலில் எஸ்பிபி உம் ஜானகி அம்மாவும்....நிகழ்வுகளில் காட்டும் தன்னடக்கமும். போட்டி நிகழ்ச்சிகளில் போட்டியாளர்களைச் சிறப்பாகக் குழந்தைகளை ஆதரித்து... உற்சாகப்படுத்தி.. மெருகூட்டலுக்குரிய அறிவுரைகள் வழங்கும்.. ஆசான் பாங்கும் இவரைச் சிகரத்திற்கே கொண்டு சென்றுவிட்டது எனலாம். அவ்வளவு சிறந்த பண்பாளன். திரை இசைக்கான உரிமை யாருக்கு...? என்ற இளையராஜாவின் அறிவுச் செருக்கை எஸ்.பி.பி யைத்தவிர வேறுயாராலும் இவ்வளவு பக்குவமாகச் சுமூகமாக சுலபமாகக் கையாண்டு இருக்க முடியாது. இதில் அவர் சிகரத்தின் உச்சிக்கும் அப்பால் சென்றே விட்டார்.

**சுரங்கள் ஏழு**

சுரிகமபதநி பாடும்போது ஏறுவரிசை சுவரங்களை ஆரோகணம் என்றும் இறங்கு வரிசை சுவரங்களை அவரோகணம் என்றும் அழைக்கிறோம் (ஆரோகணம்: ச ரி க ம ப த நி ச அவரோகணம்: ச நி த ப ம க ரி ச)

இதில் பாலசுப்பிரமணியம் யார் என்றால்.... ஆரோகணம் என்று சொல்வதா...? அவரோகணம் என்று சொல்லுவதா...? இசையைப்பற்றி அதிகம் தெரியாத என(ம)க்கு இந்த ஆரோகணமாகவும் அவரோகணமாகவும் தெரிபவர் எங்கள் பாலசுப்பிரமணியம் அவர்களே. இசையின் எல்லாமுமாகி எம்முள் இருப்பவர்... வாழ்பவர்.... எம(ன)க்குள் காதலைக் காவியமாக்கிய 1980களில் இவரின் பாடல்கள் மட்டும் இல்லாவிட்டால் அந்தக் காதல்வாழ்வு சப்பென்று ஆகிவிட்டிருக்குமோ... என்ற அளவிற்கு இளைஞர்களை கட்டிப்போட்ட காதல் பாட்டுக்குரல்.... அது காந்தக்குரல். எமக்குள் நளினத்தையும். வாழ்வையும் உருவாக்கிக் கொடுத்தகுரல். இவருக்குள் இருக்கும் மிகப்பெரிய இசைப் பிரவாகம் சாங்கதிக்குள் 'சாங்கதி' சொல்லும் விடயம். இந்த இந்த நளினம் நட்டுவத்தை விஞ்சும் நயனமாக எமக்குள் புகுந்து எம்மையெல்லாம் ஆட்டிவித்தது..... ஆட் கொண்டது... என்பதே உண்மை.

இந்தச் சங்கதிக்குள் 'சங்கதி' சொல்லும் விடயம் கடந்த 50 ஆண்டுகளாக எமது இரம்மியமான காதல் வாழ்விற்குள் பலரும் பாவித்தே கடந்து வந்திருக்கின்றோம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கடந்துவந்த வாழ்வை சற்று ஆழமாக மீட்டுப்பாருங்கள் இதனை உணர்வீர்கள். நாம் வார்த்தைகளை விட சங்கதிகளால் சங்கதி சொல்லி அன்பால்.. காதலால்.. இணைந்தவர்கள், இயந்தவர்கள், வாழ்வை இசைத்தவர்கள், இன்னும் இசைப்பவர்கள். கூடுதலாகவே அவசரப்பட்டுவிட்டதோ 'இயற்கை" என்று நாம் எல்லோரும் எண்ணும் வகையில் கொரனாவில் இருந்து மீண்டு இருதயச் செயற்பாட்டை நிறுத்தி எம்மை விட்டுப் பிரிந்துவிட்ட இசைமேதை அவர். இசைமேதையா....? அவர் அல்லது நல்ல மனிதனா....? என்றால் நான் நல்லமனிதன் என்ற முதல்நிலை மரியாதையையே அவருக்குக் கொடுப்பேன்.

இன்னொரு இசைமேதையை உருவாக்க முடியும்..? ஏன் இவரைப் போலவே...? தியாகராஜபாகவரின் மறைவும், பி.யு.சின்னப்பாவின் இழப்பும், ரி.ஆர் மகாலிங்கத்தின் இழப்பும், சௌந்தரராஜனின் சாவும், ஏன் சாகுல் ஹமீத்தின் தீடீர்ச்சாவும், கிஷோர் குமார், மொகமட்ராபி போன்றவர்களின் மூப்புச்சாவும், கண்டசாலா என்ற மாபெரும் குரலோனின் மறைவும்..... எமக்கு இனிமேல் கிடைக்குமா....? என்றிருந்தபோது ஜேசுதாசாக, சங்கர் மகாதேவனாக, சிட்சிறீராமாக எம்முன் கொண்டுவந்து நிறுத்தி எம்மை ஆசுவாசப்படுத்தித்தான் இருக்கின்றது.

ஆனால் என்(ம்) தந்தையின் மறைவை பிரதியீடு செய்ய ஒரு தந்தையை என்(ம்) முன்னால் நிறுத்த முடியவில்லை. இது எம்மில் பலருக்கும் பொருந்தித்தான் நிற்கின்றது. அதுபோலத்தான் பாலசுப்ரமணியம் என்ற மனிதனை பிரதியீடு செய்து யாரையாவது எம்முன் நிறுத்த முடியுமா..? என்றால் இல்லை என்பதே என்னுடைய பதில் அவரின் இசைப் பிரவாகத்திற்குக் கிடைத்த மகத்தான வரவேற்பு.... அங்கீகாரம்... ஆட் கொள்ளல்... எல்லாம் அவர் நல் மனிதனாக... பண்பாளனாக... தன்னடக்கம் உடையவனாக தன்னை முன்னிறுத்திய அந்தப்பண்புகளே முக்கிய கரணியங்களாகி நிற்கின்றன.

கர்வம் என்றசொல் அவர் பாவிக்கும் இந்திய மொழிகளின் அகராதியில் இல்லை. ஏன் உலகமொழி அகராதியிலேயே இல்லை எனலாம். அதுதான் அவரை இசையின் தரத்திற்கான அளவீடாக இந்த உச்சநிலைக்குக் கொண்டுவந்திருக்கின்றது என்றால் மிகையாகாது. சங்கதிகளை வைத்தபாடல் எல்லாம் இந்தப்பண்பாளன் என்ற மனிதனால்தான் 'பண்' ஆனவை.... பண்பானவை... இங்கு உயர்ந்து நிற்பது பண்பாளன்தான். சங்கதியை விட உடலிற்கும்(சரீரத்திற்கும), சாரீத்திற்கும் சம்மந்தமே இல்லை என்று மூச்சைக் கட்டுப்படுத்தி இசைத்த அந்தமனிதன் இன்று தன்மூச்சை நிறுத்தி எம்முன் அமைதி மொழியாளனாக மாறியது ஏனோ....? என்தந்தையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிச்சடங்கை நான் நேரில் காணவில்லை. ஒளிப்பதிவில் உள்ளதையும் இன்று வரை பார்க்கவில்லை. அதே போல் பாலசுப்பிரமணியத்தின் இறுதிச்சடங்கையும் நான் காணொளியிலும் பார்க்க விரும்பவில்லை. இதன்போதான மனநெகிழ்வைச் சுமக்க என்னால் முடியவில்லை. என்(ம்)னை காதலானகவும், கணவனாகவும், தந்தையாகவும், மனிதனாகவும், செதுக்கி எடுக்க ஏதோ ஒருவகையில் நேரில் சந்திக்காமலே ஆசானாக... தந்தையாக இருந்த அந்த உன்னத மனிதனுக்கு என் பிரியவிடை பிரியாவிடை அல்ல. ஏழுசுரங்கள் இருக்கும் வரை பாலசுப்ரமணியம் உயிருடனேயே இருப்பார்... ஆரோகணமாகவும் அவரோகணமாகவும்.

---




தாய்போல் இல்லாரைத் தாங்கி காலத்தே
வாய்ச்சொல், சிறுநிதி வழங்கலும் பணியே
காய்வயிறு கண்டு கனிவாய்ப் பலசொல்லி
சேய்போல் தேற்றி சிறப்பாக்கல் நற்தொண்டே

கல்லாரைக் கண்டே கற்றதைக் கூறிடலும்
நல்லவழி காட்டிடலும் நலமான நற்றொண்டே
நோயாளர் நோய்கண்டு நோவார்க்கு உற்றுதவி
தீயாமல் காத்தல் திடமானபேருதவி

அறியாரின் அவலத்தை அகற்ற முனைவதிலே
குறியாக நிற்கும் குணம்கூட தொண்டேதான்
உயர்ந்தார்.. தாழ்ந்தார்.. உறவாளர் காணாமல்
அயர்ந்தாரைக் காத்து அரவணைத்தல் பொதுப்பணி

பசிக்கும் உணவளித்து படிக்கவும் வசதிசெய்து
வசிக்க வாய்ப்பளித்து வாழ்வித்தல் தொண்டுகளே
ஓட்டுடையும் இல்லாத ஓரேழை மாந்தருக்கு
கட்டுடைகள் தந்துதவி கர்ப்பதுவும் நற்செயலே

அன்றாடம் பொதுத்தொண்டு ஆற்றுகிற சேவகரை
மன்றேற்றி வணங்கிடுவர் மதிப்பாகப் போற்றுவரே
வெந்ததைத் தின்று விதிவந்தால் சாவோர்
எந்த ஊர் வாழ்ந்தாலும் எவர்க்கும் தெரியாது

சொந்தங்கள் மறந்து சோர்வுற்றார் எண்ணுபவர்
இந்தநிலம் அகன்றாலும் எந்நாளும் வாழ்பவரே
பாகாய் உருகிய பயனடைந்தோர் போற்றிடுவர்
சாகாப் புகழூட்டும் சமூகப் பணிகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரந்தூக்கிகளைப்
பாரமேற்கும் நிறுவனங்களாய்ப்
பாடசாலைகளும்,
எழுபத்திரண்டு மாதங்களேயான
முள்ளந்தண்டினை பலப்பரீட்சை செய்யும்
பாட முறைமைகளும்,
வாழ்வின் மற்ற மகத்துவங்களை
மழுங்கடிக்கும் குத்தகைக் காரர்களாய்
பிரத்தியேக ஆசான்களும்,
பந்தயக் குதிரைகளைப் பெற்ற
பெருமிதத்தில் பெற்றோரும்,
வரையறைக்குள் கட்டுண்டு
வலம்வரும் செக்குமாடுகளாய்க்
கற்றோரும்,
இயந்திரங்களாய் இயங்கும் தொழிற்சாலை.





# கல்வித் தொழிற்சாலை

ஈச்சையூர்ச் சிவா

# எழுச்சி பெறட்டும் இளைஞர் படை!

கௌ. மோகனா



வழுவாப் பணியில் வாய்மை போற்றி
ஒழுக்கம் நீதி ஓம்பும் விதமாய்
பழுதில் சேவை பாருக்கு ஆற்ற
எழுச்சி பெறட்டும் இளைஞர் படை!.

செய்யும் தொழிலில் செம்மை துலங்க
உய்யும் வகையில் உழைப்பு விளங்க
முழுமனதுடனே முயற்சியில் வெல்ல
எழுச்சி பெறட்டும் இளைஞர் படை!.

சிந்தை விரியாச் சிறிய குழந்தை
விந்தை உலகில் வன்புணர் வேற்கும்
இழுக்காம் செயல்கள் இல்லா(து)ஓட்ட
எழுச்சி பெறட்டும் இளைஞர் படை!.

போதை வில்லைகள் பொல்லா மதுவகை
வாதை வழங்கும் வாய்ப்புகள் தவிர்க்க
முழுஉல குக்கும் முரசம் ஒலிக்க
எழுச்சி பெறட்டும் இளைஞர் படை!.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உகண்டாவில் நிலைமை அப்படியிருக்க இஸ்ரேலில் மொசாத்தின் தலைமைச் செயலகத்தில் என்ன நடைபெற்றுக்கொண்டிருந்தது?

**மொசாத்தின் திட்டம்**

மொசாத்தின் அதிரடி மீட்பு நடவடிக்கையை திட்டமிட்டுக் கொண்டிருந்த டேவிட் கிம்சே ஒரு விடயத்தில் உறுதியாக இருந்தார். என்னதான் கென்யா நாட்டினது முழுமையான ஒத்துழைப்பு இந்த விடயத்தில் கிடைத்திருந்தாலும், அதிரடி மீட்பு நடவடிக்கைகளை முற்று முழுதாக கென்யா நாட்டிலிருந்து நடத்துவதில்லை என்பதில் உறுதியாக இருந்தார். இதற்கும் ஒரு கரணியம் இருந்தது.

இரு நாடுகளுக்கிடையிலான உறவு என்ற வகையில் கென்யா இஸ்ரேலுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தாலும், உள்மனதில் அவர்களுக்கும் இஸ்ரேல்மீது கோபம் இருக்கலாம். அதுவும் தங்களுக்கு அருகிலுள்ள நாடு(உகண்டா) ஒன்றில் இஸ்ரேலிய உளவுத்துறை அதிரடிநடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளப் போகின்றது என்பதை கென்யா எந்தளவுக்கு விரும்பும் என்று ஊகிப்பது சிக்கலாக இருந்தது. யார் கண்டது, சில வேளைகளில் கவிழ்த்து விட்டாலும் விடலாம் என்ற அச்சமும் ஐயமும் மொசாத்தின் தலைவருக்கு உள்மனதில் இருந்தது.

இது பணயக்கைதிகளாக இருக்கும் இஸ்ரேலியர்களின் உயிர் சம்மந்தப்பட்ட விடயம் என்பது மாத்திரமல்ல. இப்படியொரு நடவடிக்கை தோல்வியில் முடிந்தால் அது இஸ்ரேலுக்கு ஏற்படக்கூடிய கடும் அவமானமாகவும் இருக்கும். அத்துடன் இஸ்ரேல் மீது உலகப் பழியும் வந்துசேரும். இதனால் இந்த அதிரடித்தாக்குதல் மீட்பு எப்படி நடைபெறப்போகின்றது என்ற விபரங்கள் யாருக்கும் தெரியாமல் (கென்யா உட்பட) இருக்கவேண்டியது அவசியம் என்று டேவிட்கிம்சே முடிவு செய்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்குதல் வீரர்களை (கமாண்டோக்களை) அனுப்ப வேண்டும்! ஆனால் சிக்கல் என்னவென்றால், பணயக்கைதிகள் வைக்கப்பட்டிருக்கும் இடம் இருப்பது ஆபிரிக்காக் கண்டத்தில் இருக்கிறது. இந்த அதிரடித் தாக்குதலுக்காக அதிரடி வீரர்களை (கமாண்டோக்களை) இஸ்ரேலில் இருந்து விமானம் மூலமாகக் கொண்டுபோய் ஆபிரிக்காவில் இறக்க வேண்டும்.

இஸ்ரேலில் இருந்து அதிரடித்தாக்குதல் ஒன்றை நடத்த அதிரடிவீரர்களை விமானமூலம் கொண்டு சென்றாலும், உகண்டாவுக்கு அருகிலுள்ள ஏதாவது ஒருநாட்டு விமான நிலையம் ஒன்றில் வைத்து எரிபொருள் நிரப்பப்படவேண்டும்.

அந்த நாட்களில் இஸ்ரேலில் இருந்து ஆபிரிக்கா சென்று, மீண்டும் இஸ்ரேலுக்கு திரும்பிவருமளவுக்கு எரிபொருளைக் கொண்டு செல்லக்கூடிய எந்தவொரு விமானமும் இஸ்ரேலிடம் இருந்ததில்லை. தற்போது இருப்பதுபோல விமானத்துக்கு வானில் வைத்து எரிபொருள் நிரப்பும் வசதிகளும் அப்போது இருக்கவில்லை.

இஸ்ரேலுக்கு ஆபிரிக்கக் கண்டத்தில் அந்தநாட்களில் இருந்த அரசியல் உறவுகள் கரணியமாக இஸ்ரேலுக்கு அந்தப் பிராந்தியத்தில் உதவக்கூடிய நாடுகள் அதிகமில்லை. வேறு வழியில்லாமல் இதற்கும் கென்யாவிடம்தான் போகவேண்டும் என்ற நிலை.

**இஸ்ரேலிய தந்திரம்**

இந்த இடத்தில் இஸ்ரேல் ஒரு சிறியதந்திரம் செய்ய முயன்றது. ஏற்கனவே உளவுத் துறையான மொசாத் மூலமாக கென்யாவில் இந்த அதிரடி நடவடிக்கைக்காக சில முன்னேற்பாடுகள் நடந்து கொண்டிருக்க, அதற்கும் இதற்கும் சம்மந்தமில்லை... இது வெறும் சிவில் விமான விவகாரம் என்று காட்டி கென்யாவிடம் அனுமதி வாங்க முயன்றது இஸ்ரேல்.

இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சு மூலம் கென்யாவின் வெளிவிவகார அலுவலகத்தில் தமதுவிமானம் ஒன்றுக்கு நைரோபி விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்ப வேண்டும் என்று கேட்பதாக முடிவு செய்யப்பட்டது. சும்மா விமானம் ஒன்றுக்கு எரிபொருள் நிரப்பவேண்டும் என்பதைத்தவிர, வேறு எந்த விபரமும் சொல்வதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது. இப்படியான கோரிக்கை கென்யாநாட்டு வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தில் வைக்கப்பட்டபோது, அவர்கள் எரிபொருள் நிரப்பப்படவேண்டிய குறிப்பிட்ட இந்தவிமானம் பற்றிய மேலதிக விபரங்களை கேட்கத் தொடங்கினார்கள். என்னவகை விமானம் அது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானத்தில் என்ன இருக்கிறது? விமானம் கென்யாவில் எரிபொருள் நிரப்பிக் கொண்டு எங்கே செல்லப் போகின்றது? இப்படியான பலகேள்விகள் வந்து விழுந்தன.

இதற்கெல்லாம் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சிடம் பதில் இல்லை. "இந்த விபரங்களைக் கூறினால்தான் எரிபொருள் நிரப்ப அனுமதிக்கமுடியும்" என்று கென்ய வெளிவிவகார அமைச்சுக் கூறிவிட, இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சு மொசாத்தைத் தொடர்பு கொண்டு, அடுத்து என்ன செய்வது என்று கேட்டது.

விடயம் என்னவென்றால், தீவிரவாதிகள் விமானக் கடத்தல் ஒன்றின்மூலம் இஸ்ரேலியப் பணயக்கைதிகளை உகண்டாவில் கொண்டுபோய் வைத்திருக்கிறார்கள் என்ற செய்தி தான் அப்போது உலகெங்கும் பரபரப்பாக அடிபட்டுக் கொண்டிருந்தது. இது பக்கத்து நாடான கென்யாவுக்கும் நன்றாகவே தெரியும்.

அத்துடன் இஸ்ரேலிய உளவுத்துறை அதற்குள் அதிரடியாக ஏதோ செய்யப்போகின்றது என்ற விபரமும், கென்யாவுக்கு மேலதிகமாகத் தெரியும்.

அப்படியான சூழ்நிலையில் இஸ்ரேலிய விமானம் ஒன்று கென்யாவில் எரிபொருள் நிரப்ப அனுமதி கேட்கின்றதென்றால், அது நிச்சயம் இந்தப் பணயக் கைதிகளுடன் சம்மந்தமாக ஏதோ இரகசியமாக ஒரு காரியம் செய்யப்போகின்றார்கள் என்பதை கென்யா ஊகித்திருந்தது. இதனால் என்ன விடயம் என்று சரியாகத் தெரியாமல் தமது நாட்டு விமான நிலையத்தை இதற்கு உபயோகிப்பதற்கு கென்யா விரும்பவில்லை. டேவிட் கிம்சே மொசாத்தின் தலைவருடன் கலந்து ஆலோசித்தார். முடிவில் மொசாத்தின் மற்றொரு திட்டம் உருவாகியது.

**விமான நிலையத்தை உளவு பார்த்தல்!**

அப்படியான சூழ்நிலையில் இஸ்ரேலிய விமானம் ஒன்று கென்யாவில் எரிபொருள் நிரப்ப அனுமதி கேட்கின்றது! "இந்த விமானத்துக்கும் பணயக் கைதிகளுக்கும் சம்மந்தமே இல்லை என்று முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் வேலை கூடாது. அது கென்யாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலுள்ள நாடுகளுக்கிடையிலான உறவுகளைக் கெடுத்துவிடும்" என்பதை டேவிட் ஒப்புக்கொண்டார். அதேநேரத்தில், பணயக் கைதிகளை மீட்க அதிரடித்திட்டம் ஒன்றுக்காகத்தான் இந்த விமானம் என்று கூறவும் அவர் விரும்பவில்லை.

எனவே, இப்படியும் இல்லாமல், அப்படியும் இல்லாமல் புதிதாக, அதே நேரத்தில் நம்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியாக ஒருகதை கூறுவது என மொசாத் முடிவெடுத்தது. டேவிட் கிம்சேயின் மூளையில் அதற்கான பொய்க்கதை தயாரானது. அந்தக் கதைதான் கென்யாவுக்கும் இஸ்ரேலினால் சொல்லப்பட்டது.

**அந்தக் கதை என்ன?**

"விமானக் கடத்தல்காரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி, பணயக் கைதிகளை மீட்கவே இஸ்ரேல் முடிவெடுத்திருக்கிறது. ஆனால், கடத்தற்காரர்களின் கோரிக்கையை இஸ்ரேல் நிறைவேற்றிய பின்னரும், பணயக்கைதிகளை நோக்கித் தீவிரவாதிகள் துப்பாக்கிகளால் சுட்டால் என்ன செய்வது? ஒருவேளை அப்படி நடந்தால், உடனடி மருத்துவ உதவிகளைச் செய்யவே இந்த விமானம்!

இது ஒரு பறக்கும் வைத்தியசாலை போல அமைக்கப்பட்டிருக்கின்றது. இதில் மருத்துவர்கள் இருப்பார்கள். விமானத்துக்கு உள்ளேயே சகல மருத்துவ உபகரணங்களுடன் அறுவைச்சிகிச்சைக்கான வசதிகளும் உண்டு. அப்படியான ஒரு விமானத்துக்கு எரிபொருள் நிரப்பவே அனுமதி கேட்கிறோம்" என கென்யாவின் வெளிவிவகார அமைச்சிடம் கூறப்பட்டது. விமானத்துக்கும் மொசாத்துக்கும் எந்தவொரு சம்மந்தமும் இல்லை என்பது போலவே ஒரு தோற்றம் காண்பிக்கப்பட்டது.

மருத்துவ உதவி என்ற இந்தக் கோரிக்கையுடன் சென்றபோது கென்யாவால் அதை மறுக்க முடியவில்லை. சிலமணி நேரங்களிலேயே இஸ்ரேலிய விமானம் நைரோபி விமான நிலையத்தில் இறங்கி எரிபொருள் நிரப்புவதற்கான அனுமதியை கென்யா அரசு கொடுத்தது. மனிதாபிமான வகையிலான அனுமதி என்று கென்யாவின் நாடாளுமன்றத்தில் கூறப்பட்டது.

அந்த ஏற்பாடும் சரி. இனி அடுத்த சிக்கல். உளவாளிகள் உகண்டாவுக்குள் எப்படி நுழைவது? மொசாத் தனது உளவாளிகள் ஆறுபேர் ஏற்கனவே கென்யாவுக்குள் அனுப்பிவிட்டது நமக்குத் தெரியும். மேலதிக உளவாளிகளையும் அங்கே அனுப்புவதற்கு மொசாத் திட்டமிட்டது. ஆனால், கென்யாவிலிருந்து உகண்டா நாட்டுக்குள் இஸ்ரேலிய உளவாளிகள் நுழைவது எப்படி என்பதுதான் இன்னமும் குழப்பமாக இருந்தது.

அதிரடிவீரர்களை ஏற்றிச்செல்லும் விமானம் உகண்டாவின் என்டபே விமான நிலையத்தில் போய் அதிரடியாக இறங்கி, பணயக்கைதிகளை மீட்பது என்பதுதான் மொசாத்தின் திட்டம். அப்படிச் செய்வதற்கு முன்னர் மொசாத்தின் உளவாளிகள் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமான நிலையம் இருக்கும் பிரதேசத்திற்குள் ஊடுருவிச் சில முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்கு முக்கியமாக அந்த விமானநிலையம் பற்றிய உளவுத் தகவல்கள் வேண்டும்.

விமானநிலையத்தில் இப்போது பாதுகாப்பு ஏற்பாடுகள் எப்படிச் செய்யப்பட்டிருக்கின்றன என்பது தெரியவேண்டும். எந்த நேரத்தில் குறைவான பாதுகாப்பு இருக்கின்றது என்பதை அறிய வேண்டும். இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக, அந்த விமானநிலையத்தின் முழுமையான வரைபடம் வேண்டும். இந்தத் தேவைகளுக்காக முதலில் உளவாளிகள் உகண்டாவுக்குள் நுழைய வேண்டும்.

இஸ்ரேலியர்களை உத்தியோகபூர்வமாக உள்ளே நுழைய இடிஅமீன் அனுமதிக்க மாட்டார் என்பது இஸ்ரேலுக்கு நன்றாகவே தெரியும். எனவே யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாகத்தான உள்ளே நுழையவேண்டும்.

**அடுத்த சிக்கல் P.L.O.!**

(மீதி அடுத்த தொடரில்...........)

## "நிறங்கள்"

**கிண்ணியா சபீனா**

கண்ணைக் கவரும் நிறங்கள்,
எண்ணம் மகிழ்ந்திடச் செய்கிறதே!
சின்னஞ் சிறுவர்நாம் சித்திரங்கள்
நிறங்கள் பூசிட வரைவோமே!
(கண்ணைக் கவரும்...)

வானும் கடலும் நீலநிறம்!
வாழைப் பழங்கள் மஞ்சள்நிறம்!
ஆவின் பாலது வெள்ளைநிறம்!
நம்பற்களின் நிறமும் பால்நிறமே!
(கண்ணைக் கவரும்..)

காணும் பயிர்கள் பச்சைநிறம்!
கரையும் காகமோ கறுப்புநிறம்!
மனிதரின் குருதியோ சிவப்புநிறம்!
வானவில் காட்டிடும் ஏழுநிறம்!
(கண்ணைக் கவரும்..)

பலநிறப் பூக்கள் பூமியிலுண்டு!
பார்வைக்கு அழகாய்த் தெரிகிறது!
பாதையில் காணும் மூன்றுநிறம்!
பயண ஒழுங்கினைச் சொல்கிறது!
(கண்ணைக் கவரும்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடங்கு சம்பிரதாயம்

பிரம்மியா சண்முகராஜா





வீட்டுக்கு வீடு வாசப்படிதான்
மதத்துக்குள் மரித்துப்போன
மனங்களுக்கு மடமை
இன்னும் சாகவில்லை.

வடக்கில் வாசல் வேணும்
வாஸ்து பார்த்து கிணறு வேணும்
வீடு கட்டி முடிஞ்சாச்சு
அக்னி மூலையில
பாத போட்டு வச்சிருக்கு
மனைப் பொருத்தம் சரியில்லையே
மாஞ்சி மாஞ்சி கட்டியாச்சு
மனசுக்குள்ள வாஸ்து தொல்ல

வெள்ளிக் கிழமையில
பொன் பொருள் கொடுக்காத
பிச்சக்காரன் வந்தா
நச்சரித்து அனுப்பிடுவர்

ஆறு மணி ஆகிப்போச்சு
பச்சை மண்ணு வீட்ட வச்சுக்கொண்டு
பக்கத்து வீட்டுக்காரருக்கு என்ன
பாத்திரத்தில் தண்ணீர் வார்ப்பு
வெட்ட சொல்லு கிணறு அங்க
தண்ணிய கொடுக்கவும்
சாத்திரத்தில் நேரகாலமிருக்காப்பா?

இருண்ட பின்ன ஊர் கடையில்
உடைத்த முட்டை தான் கிடைக்கும்
அயல்வீட்ட உப்பிருந்தா
தரமாட்டா பொழுது பட

காலையில கோயில் தேர்
ரவுக்க பிஞ்சு போய்க் கிடக்கு
காரி அம்மாவிட்ட
ஊசி நூலு தான் இருக்கு
வேண்டியந்து தைக்கலாம்னா
விடியட்டும் போய்வா எண்டா

பயணப்பட்ட நேரம் பார்த்து
பார்க்காமல் நடந்த பாதையில
பாதத்தில கல்லு முட்ட
என்ன இது தடையா போச்சு
உட்கார்ந்து போகலாமே

துணைவர் போக புறத்தநிண்டு
கூவிக்கிட்டு ஓடிப்போனா
பட்டணத்து மகராசி
பழக்கம் என்ன புரத்தியால கூப்பிடுறாய்
பாட்டி திட்டிப் பன்னீர் ஊற்று அவ கண்ணில்

கருப்பு சேலை கட்டிக்கிட்டா
கலகலப்பு பாக்குறது
வெள்ளை சேலைக்காரிகளை
நல்ல சபை ஏற்க்காது
அவ எரிச்சா உலகொதிக்கும்
ஏத்திவிட்டார் எரியாதா விளக்கு
தாலி அறுத்துப்புட்டா
பொட்டு இல்லை பூவில்லை
பட்டுக்கு ஆசைப்பட்டால்
பழிகாரி ஆகிப்போவாள்

மூன்றாம் கால் பொண்ணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த பொண்ணு போல் இல்லை
முகராசி அவளால முத்துமழை என் வீட்டில்

அக்கா மக குத்த வச்சா
மாமனுக்கு சரியில்ல
அண்ணன் மகன் பிறந்து விட்டான்
அப்பனுக்கு ஆயுள் போச்சு
கல்வியில் மந்த புத்தி
மந்திரிச்ச நூல் இருக்கு
மசக்க நோய் வந்தாலும்
கண்ணூறு சுத்திப்போடு

இருட்டுக்கு எங்கேயிப்போ
மாமிச உணவோட
இரும்போ கரியோ எடுத்துப்போ
காத்து கூட அண்டாது

பூத்தவள் மாதம் தள்ள
கொல்லையில கொடி காய
வயித்து வலி அவள கொல்ல
ஓரத்தில நில்லு தள்ளி
அப்பா கிட்ட போகாத
அண்ணன் முகம் பார்க்காத ஆகாது தீட்டு அது
செத்த விட்ட தண்ணி வேணாம்

வந்தவுடன் தலை குளிப்பு
முப்பது நாளாச்சு அந்த வீட்டு
அன்னம் தீட்டு
பூப்படஞ்சா தீட்டு
இறப்பு என்றா திட்டு
பிறப்பு கூட தீட்டு
உண்மைத் தீட்டு
உன் மனதில் நீக்கு....
நேரம் பார்த்து நாள் பார்த்து
சகுனம் பார்த்து சடங்கு பார்த்து
வாடகைக்கு வாழ வந்த பூமியில்
வாய்பாடுற பாட்ட பாரு
காலம் பார்த்து கதை முடிஞ்சு
கட்டையில போகக்குள்ள
கை விரிச்ச புணத்தை பாரு.


## நம்மட முற்றத்தில் படைப்பாளிகளின் படைப்புகள்

சிறுகதை, கவிதை, கட்டுரை, நகைச்சுவை, பயன்தரு தகவல்கள், ஓவியங்கள் (கறுப்பு/வெள்ளை) போன்ற படைப்புகளை படைப்பாளிகளிடமிருந்து எதிர் பார்க்கிறோம். படைப்புகள் அனைத்தும் பிறமொழி கலவாது இருத்தல் வேண்டும். பிறமொழி கலப்பின் அச்சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல்லினை இடுவதற்கு நம்மட முற்றத்தின் ஆசிரியர் குழுவிற்கு உரித்து உண்டு. ஆக்கங்கள் பாமினி (Bamini) அல்லது Unicode இல் இருத்தல் வேண்டும். nammadamuttam20@gmail.com எனும் மின்னஞ்சலுக்கோ அல்லது 0772908990 எனும் புலனத்திற்கோ (WhatsApp) அனுப்பி வைக்கவும். (இதழ் தொடர்பான திறனாய்வு மற்றும் 13வது திருத்தச் சட்டம் தொடர்பான கருத்துக்களையும் படிப்போரிடமிருந்து எதிர்பார்க்கிறோம்)

–முதன்மை ஆசிரியர்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடி மின்னல் முழக்கம் !

கைத்தொலைபேசி சிணுங்கியது. கந்தையா வாத்தியார் அதைக் கடுகதியிலெடுத்து காதில் வைத்தார்.

"ஆர் மகள் மாலதியே? "ஓமப்பா அம்மா...நிக்கிறாவே.."? "அம்மாட்டைக் குடுக்கவே...? "வேண்டாமப்பா... நான்...செல்லுறதை அவவிட்டை சொன்னாக் காணும்""சரி...சொல்லு" "இல்லையப்பா...உங்கடை மருமகன் நாளைக்கு வவுனியாவிலையிருந்து திருகோணமலைக்கு வாறார் அவங்கடை கந்தோர் அலுவலாம். பின்னேரம் போல உங்கையும் வருவார்" "அதுக்கென்ன வரட்டும்" " அதில்லையப்பா அவர் வரேக்கை மிளகாய் கொஞ்சம் வறுத்துத் திரிச்சு அவரிட்டை குடுத்துவிட அம்மாட்டைச் சொல்லுங்கோ" "சரி பிள்ளை" "மறந்திடாமல் அம்மாட்டை சொல்லுங்கோ.. வைக்கிறன்."

வவுனியாவில் வசிக்கிற கந்தையா வாத்தியாரின் மூத்த மகள் மாலதி சொன்ன செய்தியை அவர் தனது மனைவி கமலத்திடம் உடனடியாக சொல்லி வைக்க கமலம் உசாரடைந்து "என்னப்பா போன மாதந்தானே ஒரு பெரிய போத்தில் நிறைய மிளகாய்த்தூள் குடுத்து விட்டனான். அதுக்குள்ளை முடிச்சுப்போட்டாளே.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்குத் தெரியுந்தானே அவளோடை படிப்பிக்கிற வாத்திப்பெட்டையளெல்லாம் அவளிட்டைத்தானாம் மிளகாய்த் தூள் இரவல் வாங்கிறவளையாம். கடைத் தூளுகளுக்குள்ளை நிறத்துக்காக செங்கல்லையும் சிவப்புச் சாயத்தையும் கலந்து விக்கிறாங்களாம் படுபாவியள். மிளகாய் விலையெண்டாப்போலை இப்பிடியே மண் கொள்ளை வியாபாரம் செய்யிறது." "உண்மைதானப்பா....வியாபரத்திலை இப்ப நீதி நியாத்தை காணேலாது. அது இருக்கட்டுமப்பா....நீங்கள் கதையை விட்டிட்டு ஞாயிறு எண்டாலும் மணியத்தார் இண்டைக்கு கடைதிறந்திருப்பார். அங்கை போய் மிளகாய் மல்லி வேண்டிய மற்றச்சரக்குகளையும் வாங்கிக்கொண்டுவாங்கோ. கழுவிக்காய வைக்க வேணுமல்லே. நான் மிளகாயையும் தண்ணியிலை ஒரு அலசு அலசிக் காய வைக்கிறனான். உள்ள ஊத்தைத்தெரு தின்னையெல்லாம் மிளகாயை காய வைக்கிறவங்கள். அந்த அழுக்குத் தூசியளோடை எல்லாரும் மிளகாயை வறுத்து திரிக்கிறமாதிரி என்னாலை ஏலாது. இப்ப பத்துமணிதானே. எங்கையெண்டாலும் கதைச்சு மினக்கெடாமல் உடனை வாங்கி வாங்கோப்பா. கழுவி நல்லா கலகலவெண்டு காயவிட்டு இரவைக்கு வறுக்கலாம்" என நீட்டி முழங்கி மூச்சு விடாமல் கதைச்சு நிறுத்தினாள் கமலம். கந்தையா வாத்தியாரும் மணியத்தார் கடைக்கு உடனடியாகப் போய் மிளகாய் உட்பட அனைத்தையும் வாங்கியதோடு ஒரு கருவேப்பிலைக் கொத்தையும் எங்கேயோ தேடிவாங்கி வீடுவந்து சேர்ந்தார்.

கழுவிக் காயவைத்த அனைத்தும் கலகலவென இருப்பதை அவதானித்த கமலம் அவற்றை வறுக்க ஆரம்பிக்க இருட்டாகப் போய்விட்டது. மின்சாரவிளக்கின் ஒளியில் சரக்குகள் ஒவ்வொன்றாக வறுத்துக்கொண்டிருந்தவள் கடைசியாக மிளகாயை வறுக்க எடுத்தபோது திடீரென வழமையாக மின்சாரம் கண்ணை மூடிக் கழுத்தறுத்தது. அதனால் இருட்டில் கமலம் தட்டுத்தடுமாற கந்தையா வாத்தியார் உடனடியாக ஒரு மெழுகுதிரியை ஏற்றி அடுப்புக்கு அண்மையில் கொண்டுபோய் வைத்தார் . ஆனால் அந்த மங்கிய ஒளி யில் மிளகாயை வறுக்கவோ அது சரியாக வறுபட்டதை அறிவதோ கமலத்துக்கு மிகச் சிரமமாக இருந்தது. ஒருமாதிரி தட்டுத்தடுமாறி வறுத்துக்கொண்டிருந்த கமலம் "இஞ்சே ருங்கோப்பா மிளகா நல்லா வறுபட்டுதோ என்னவோ கொஞ்சம் பாருங்கோப்பா. என்ரை கண்ணுக்கு ஒண்டுமா விளங்கேல்லை. கூட வறுபட்டா தூள் கறுப்பாய் போகும்" என துணைவரை அழைக்க வாத்தியாரும் தனது கண்ணாடியை மாட்டிக்கொண்டு அந்த மங்கிய வெளிச்சத்தில் தாச்சிக்குள் வறுபட்டுக்கொண்டிருக்கும் மிளகாயை குனிந்து உற்று நோக்கிவிட்டு 'சரியப்பா ..சரி வறுபட்டது காணும்" எனச்சொல்ல கமலம் வறுப்பதைக் கைவிட்டுவிட்டு சற்றுப் பொறுத்து எல்லாம் ஆறியதும் அனைத்தையும் ஒரு உரப்பையில் போட்டுக் கட்டிவைத்தாள். அவள் கட்டிவைத்து பல நிமயங்களுக்குப் பின்தான் மின்சாரம் கண்விழித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தநாள் கந்தையா வாத்தியார் புறப்பட்டு கந்தசாமியின் அரவை இயந்திர தொழிலகத்தில் அதை கொண்டு போய் வைத்துவிட்டு தனக்கு முன்னதாக வந்தவர்களுக்கு அரைத்துக் கொடுக்கும்வரை காவலிருந்தார். சற்று நேரத்தில் கந்தசாமி இவரது மிளகாய்ப் பையை எடுத்து நிறுக்க, நிறுக்கும் தராசு இரண்டு இலக்கங்களை தாண்டி நின்றது. அதைக் குறித்துக்கொண்ட கந்தசாமி வாத்தியாரின் உரப் பையையை அவிழ்த்து இயந்திர மேற்பாகத்தில் கொட்டிவிட்டு அரவை இயந்திரத்தை இயக்கினான்.

சற்று நேரத்தில் அரவை இயந்திரத்திலிருந்து கடமடா என சத்தம் வந்தது. "என்ன வாத்தியாரையா அம்மா கனமா மஞ்சல்கட்டியை போட்டிட்டா போலை இருக்கு" என்ற கந்தசாமி மிளகாயை ஒருசுற்று அரைத்து வாளியிலெடுத்து ஒரு ஐயத்தில் அதைநிலத்தில் போடப்பட்டிருந்த கடுதாசித்தாளில் கொட்டினான். தாளில் கொட்டப்பட்ட அரைகுறையாக அரைக்கப்பட்ட மிளகாய்த்தூளுக்குள் பளபளவென கண்ணாடித் துகள்கள் மின்னியதுடன் ஏதேதோ துண்டு துகள்களும் காட்சிதந்தன.

"வாத்தியாரையா இதுவரைக்கும் இப்படி ஒரு மிளகாய் தூளை நான் அரைக்கேல்லை.. என்ன நடந்ததையா ....?" என ஆச்சரியமாக கேள்வி தொடுத்தபடி வாத்தியாரைப் பார்த்தான். வாத்தியாரும் அதை உற்று நோக்கினார். அவன் சொன்ன மாதிரி மிளகாய்த்தூளில் ஆங்காங்கே பளபளவென கண்ணாடித்துகள் மின்னிக் கொண்டிருந்ததுடன் வித்தியாசமான மங்கல் நிறத்தில் பல துண்டு துகள்களும் கலந்திருந்ததைக் கவனித்தார்.

கந்தையா வாத்தியாருக்கு இப்போதுதான் நடந்த சங்கதிகள் பொறிதட்டியது. இரவு மின்சாரம் மீளவும் வந்தபோது அன்று வாங்கிவந்த தினசரியை வாசிக்க கண்ணாடியை தேடினார். அது கிடைக்கவில்லை. காலையில் மிளகாய் அரைக்க புறப்பட்டபோதும் கண்ணாடியை எல்லா இடமும் தேடியும் அது கிடைக்கவில்லை. எங்கே போனது மூக்குக்கண்ணாடி? துணைவி கமலம் மிளகாய் சரியாக வறுபட்டிருக்கிறதா எனப் பார்க்கச்சொன்ன போது அவர் குனிந்து அதை உற்று நோக்கிய வேளை அவர் அணிந்திருந்த கண்ணாடி இவரை அறியாமல் மிளகாய் வறுக்கும் தாச்சிக்குள் விழுந்துள்ளது. சரியான வெளிச்சமில்லாத இரவில் கந்தையா வாத்தியாருக்கோ அவரது துணைவிக்கோ அது தெரியாமல் இருக்க மிளகாயோடு மிளகாயாக கலந்துவிட்ட மூக்குக்கண்ணாடி இப்போ அரைத்த மிளகாய் தூளுடன் இரண்டறக் கலந்து மின்னிக்கொண்டிருந்தது.

(உண்மைகலந்த கற்பனை)


வறுமையை வெல்வது தொண்டுமன் இலக்கு அல்ல, அது நீதியின் செயல் – நெல்சன் மண்டேலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு நிலைத்திருக்கும்

அம். கௌரிதாசன்

நன்னித்தம்பி' மகன் நல்ல தவ பாலனது
நன்நூல் காண்கின்றோம் நிலவின்
நினைவுகளாய்!
நல்லாசிரியர் இவர்' நல்ல மனிதரிவர்
மெல்லிசைப் பாடல்களால்
மேதினியில் புகழ் பூத்தார்!...

அன்பரசியின் தந்தை அன்பின் அடையாளம்
பண்பின் குன்றமிவர்
பாசத்தின் உறைவிடமே
சினத்தைச் சிறை கொண்ட சிகரம்'
அநீதிகளை மனத்தால் நினைக்காத
மனிதகளில் இவர் புனிதர்!...


இல்வாழ்க்கைக் காவில் 'இராசாத்தி'
துணையாகி நல் வாழ்க்கை வாழுகின்ற
நம் நிலவின் தாசனிவர்
அன்பரசி, அருட்பிரியை, அருண்மாறன் என மூவர்
இன்ப மழலைகளாய் இவ்வுலகில் வாழுகிறார்!....

வித்துவத்தால் பாரில் விறல் படைத்தோர் மத்தியிலே
தத்துவப் பாடல்களால் தனியிடத்தைப் பெற்றுள்ளார்
நீதிக்குத் தலைசாய்க்கும் நினைப்புடனே வாழுமிவர்,
சாதித்தார் என்பவைகள் சாகாத சத்தியமே!....

"வாழ்த்துப்பா" ஒன்றெழுதி வருகை தந்தோர் மத்தியிலே,
வாழ்த்துகின்ற சந்தர்ப்பம் வாராது போனாலும்
தவபாலன் அண்ணனிலே தாசன் யான்
கொண்ட பக்தி அவனியிலே குன்றாது
அந்தம் வரைநிலைத்திருக்கும்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Say the Colour with "U"

**இ. நேமிநாதன்**

ஓர் இனத்தை அழிக்கவேண்டுமானால் ஆட்களைக்கொன்றுதான் அழிக்கவேண்டும் என்றில்லை. அந்த இனத்திற்கான மொழியை அழித்துவிட்டால் சரி. அப்படியாயின் மொழியை அழிக்க வேண்டும் என்றால் என்ன செய்யலாம்? அந்த மொழியின் இலக்கியம், இலக்கணங்களை அழித்துவிடவேண்டும். ஒரு மொழியின் இலக்கணம், இலக்கியம் என்பவற்றை எப்படி அழிக்கலாம்?

ஒரு மொழியில் பயன்படுத்தப்படும் சொற்களை, வாக்கியங்களை எழுத்துக்களை எழுத்தின் உறுப்புக்களை எப்படிப் பாவித்தாலும் சரி, விளங்கினால் சரிதான், தொடர்பாடல்தான் முக்கியம், மொழி என்பதே தொடர்பாடலின் கருவிதான் என்று சுருக்கிவிட்டால் சரி. இப்படியான ஒரு தோற்றமாயையை ஏற்படுத்தினால் ஒரு விடயத்தை பலரும் பல விதமாகப் பயன்படுத்த இடமளிக்கும். இதனால் சொற்களில், இலக்கணத்தில், எழுத்தமைப்பில் ஒரு குழப்பம் தோன்றும் அந்தக் குழப்பத்தை மூலதனமாக்கி கிளைமொழிகள் உருவாகும். கிளைமொழிகள் உருவாகினால் மூலமொழி அழியும்.

மொழி என்பது இயற்கையின் அங்கமாகும். மனித மனத்தின் செயலாற்றலாகவும் உள்ளுணர்வாகவும் சக்தியாகவும், ஒருவரின் மனச்சாட்சியாகவும் மொழி இருக்கிறது. அப்படியென்றால், மொழி மனிதமனத்தின் ஒட்டுமொத்த அறிதல் என்றாகிறது. அறிதல் வளரவளர, மொழியும் வளருகிறது. மொழி தொடர்பாடும் ஊடகம் மட்டுமே என்பது வீட்டில் மாட்டிவைத்திருக்கும் சுவாமி படங்கள்தான் கடவுள் என்று சொல்வதற்கு ஒப்பானது. மொழியின் செயற்பாடு வெறுமனே தொடர்பாடல் மாத்திரந்தான் என்று நினைப்பது மொழியறிவின் முதற்கட்டமான குழந்தைநிலை. எடுத்துக்காட்டாக நான் உங்கள் ஊரைக்குறிப்பிட்டு திட்டுகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியியல் ரீதியான ஓர் இடமாக மட்டும் உங்கள் ஊரை வைத்திருந்தால் பேசாமற் போய்விடுவீர்கள். ஆனால் உங்களது ஊர், உங்களது ஆழ்மனதுடன், நினைவுகளுடன், நம்பிக்கைகளுடன், உணர்வுகளுடன், அறிவு, மனப்பாங்கு போன்ற பல விடயங்களுடன் தொடர்பட்டிருப்பதால் உங்களுக்கு ஊரைத் திட்டியதும் கோபம் வருகிறது. மொழியின் பங்களிப்பு தொடர்பாடல் மட்டும்தான் என்றுசொல்வது ஒரு தட்டையான கருத்தாகும். ஊர் என்பது உங்கள் வசிப்பிடம் அல்லது வீடு அமைந்திருக்கும் ஓர் இடந்தானே அதைத் திட்டினால் உங்களுக்கேன் கோபம்வரவேண்டும்? மொழி என்பதும் அதைப் போலத்தான் அதன் நோக்கம் தொடர்பாடல் மட்டுந்தான் என்றால் நீங்கள் உலக வரலாறு அறியாதவர்தான். மொழியினால் எத்தனை போர்கள் நடந்திருக்கின்றன. பிரித்தானியா என்றால் ஆங்கிலேயர்களின் நாடு என்றுதான் வெளியிலிருந்து பார்ப்பவர்கள் நினைப்பார்கள் ஆனால் அங்கு வேல்ஸ் மொழி, ஐரிஸ் மொழி என்று பிறமொழிகள் உள்ளன.

'மொழி என்பது தொடர்பாடல் செய்யும் கருவி' மட்டுல்ல என்பதை அவர்களுடன் நீண்ட காலமாகப் பழகி நிதானமாக அறிந்துகொண்டேன். மொழி வெறுமனே தொடர்பாடற் கருவிதான் என்போரைப் பார்க்கும்போது எனது வேல்ஸ் நண்பர்கள் ஞாபகத்திற்கு வருவார்கள். Say the Colour with "U" ஆங்கிலேய நண்பர்கள் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். அதாவது அமெரிக்க ஆங்கிலத்திடமிருந்து பிரிட்டிஷாரின் ஆங்கிலத்தைப் பாதுகாக்க அவர்கள் திடமாக இருப்பதைத்தான் இந்தச் சொல்லாடல் உணர்த்தும். பிரித்தானியர் வர்ணத்தை colour என்று எழுதுவர். அமெரிக்கர்கள் color என்று எழுதுவார்கள். உச்சரிக்கும்போது இருவரும் ஒரேவிதமாகத்தான் உச்சரிப்பர். ஆனால் "U" சேர்த்து உச்சரிக்கவேண்டும் என்று பிரித்தானியர்கள் சொல்வது அமெரிக்க ஊடுருவலில் இருந்து பிரித்தானிய ஆங்கிலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத்தான். உண்மையில் உச்சரிக்கும்போது "U"ஐ உச்சரிக்க முடியாது. ஆனால் அவர்கள் அப்படிச் சொல்வது அமெரிக்க ஆங்கிலத்தில் இருந்து பிரித்தானிய ஆங்கிலத்தைப் பாதுகாக்கத்தான். இரண்டும் ஆங்கிலந்தானே பிறகு ஏன் பாதுகாக்கவேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். இரண்டும் ஆங்கிலந்தான் ஆனால் ஒரே மொழியில் தங்களது தனித்துவத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். இணையத்தையும் சமூக ஊடகங்களையும் நேற்றுக்கண்ட நாமே எழுதுவது மற்றவருக்கு விளங்கினால் சரி தொடர்பாடல்தானே? என்று குறிப்பிட்டால் மொழியை நாங்கள் தெளிவாக புரிந்துகொள்ளவில்லை என்றுதான் சொல்லவேண்டும். தொடர்பாடல் மட்டுந்தான் மொழியின் நோக்கம் என்றால், உலகின் எல்லோரும் விளங்கிக் கொள்ளக்கூடிய சைகை மொழியை நாம் பொது மொழியாக்கிவிடலாமே?


அரசியலில் ஒழுக்கம் இல்லை பட்டறிவு மட்டுமே உள்ளது. அயோக்கியன் என்பதற்காகக்கூட அவன் நமக்குப் பயன்படலாம் – விளாதிமிர் லெனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுமொழி உரையாடலில் ஒலிக்கூறு மட்டுமல்ல முக அறிகுறிகளாலும், சைகைகளாலும் கருத்துக்களை வெளியிடுவதற்கு இடமும், வழிகளும் உண்டு. அத்துடன் உடனுக்குடன், ஐயம் மற்றும் விளக்கம்கேட்டு அறிந்துகொள்ளும் வசதியும் உண்டு. ஆனால் இந்தவசதி, எழுத்து மொழியில் பொதுவாகக் கிடைப்பதில்லை. இதன் கரணியமாக எழுத்துவடிவத்தில் சில கூடுதல் குறியீடுகளைப் பயன்படுத்திக் கடுமையான விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. அதிலும் மொழிகளின் தனித்துவம் காரணமாக ஒவ்வொரு மொழியின் அடிப்படையில் வெவ்வேறு சைகை மொழிகள் உள்ளன. எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தை அடிப்படையாக கொண்டமைந்த சைகைமொழி கற்றவருக்கு, தமிழ் சைகை மொழி விளங்காது.

உலகின் எந்த மூலையிலும் தமிழ்மொழிக்கென்று ஒரு நாடு இல்லை. அரசியல் அதிகாரத்தில் இல்லாத ஒரு மொழி எவ்வாறு அழியாமல் நிலைத்திருக்கிறது என்றால் அதற்குரிய கரணியம் தமிழ்மொழி தன்னகத்தே கொண்டுள்ள இலக்கியங்களும் இலக்கண நூல்களுந்தான். பொருள்பொதிந்த மொழியை உருவாக்க அதன் சொற்களானது விதிகள் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு உருவாக்கப்படுகின்றன. சொல்லின் அமைப்பானது குறிப்பிட்ட விதிகளைப் பின்பற்றி பொருத்தமான பொருளை உருவாக்கும். இந்த விதிகளும் தன்னிச்சையாக ஏற்படுத்தப்பட்டதாகும். இருப்பினும், அந்த விதிகள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட நிரந்தரத்தன்மை கொண்டவை. ஆகையால் ஒலிக் குறியீட்டின் அடிப்படையில் எழுந்த விதிகளால் உருவான மொழியின் மூலமாகத்தான் மனிதர்கள் கருத்துக்களை உருவாக்குகிறார்கள். தமிழில் இந்தவிதி மிகவும் சிறப்பான முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக எனது பட்டறிவு ஒன்றைச் சொல்கிறேன். ஆலயத்தில் திருவிழா. ஒரு சிவனடியார் கொஞ்சம் நகைச்சுவையாப் பேசிக்கொண்டிருந்தார். நான் அவரது பக்கத்தில் போய் அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். எனது கையில் இருந்த கற்பூரப் பெட்டியை அவர் கவனித்துவிட்டார். “இது என்ன?” என்று கேட்டார். நானும் “கற்பூரம்” என்றேன். அது தவறு என்றார். கருப்பூரந்தான் சரி என்றார். “அப்படியானால் இந்தப் பெட்டியில் எழுதியிருப்பது தவறு என்கிறீர்களா?” என்று நான் கேட்டேன். “அப்படி யானால் நீ நாச்சியாரைப் பிழைசொல்கிறாயா? என்றார். “கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்கும்மோ மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும் விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே” என்னும் பாடலிலே கருப்பூரம் என்றுதான் நாச்சியார் சொல்லியிருக்கிறாள்.” என்றார் பிறகெப்படி கருப்பூரம், கற்பூரமாக மாறும் என்றார்.


உன்னால் யாருக்கும் உதவி செய்ய முடியாது, அவர்களுக்குப் பணிதான் ஆற்ற முடியும் – சுவாமி விவேகானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமேல் கருப்பூரம் என்றுதான் பயன்படுத்தவேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். ஒரு சொல்லுக்கே இலக்கியத்தில் ஆதாரம் இருக்கும்போது தமிழுக்கான உரைநடை ஐரோப்பியர் காலத்தின் பின்னர்தான் தோன்றியது எனினும் உரை நடையையும் கடந்து நிற்பதாகவே எமது மொழியின் இலக்கணம் உள்ளது சிறப்பு.

எல்லாக் காலத்திற்கும் ஏற்றவகையில் இலக்கணம் எழுத நன்னூலார், தொல்காப்பியர் போன்றவர்களால் எவ்வாறு முடிந்தது? எதிர்காலத்தில் வரக்கூடிய சவால்களுக்கு எல்லாம் வழிவிட்டு அதற்குத் தீர்வும் வைத்துவிட்டல்லவா அவர்கள் போயிருக்கிறார்கள். இன்றைய காலத்தின் புதிய தொடர்பாடல் முறைகளும் சாதனங்களும் எமது மொழிக்குச் சவாலான விடயங்கள்தான். எனினும் நாம் புதிதாக ஒன்றும் செய்யவேண்டியதில்லை. நாம் எழுத்துப்பிழை, இலக்கணப்பிழையின்றி எழுதினாலே போதும். முடிந்தவரை பிழையின்றி எழுதுவதற்கு முயற்சியுங்கள், சரியாக எழுத முடியாவிட்டால் முயற்சியெடுத்துக் கற்றுக்கொள்வோம்.

---




விரிந்து கிடக்கும் மணல் பரப்பில்
வெறிச்சோடிக் கிடக்கிறது மனிதம் .
பொய்யும் புரட்டும்
கொள்ளையும் கொலையும்
என்று மாறும் மனிதமனம்.

நாளுக் கொன்றாய்
நாட்காலிச் சண்டை
பட்டப் படிப்பு படித்த பின்னும்
பகுத் தறிவு ஏதுமில்லை.

நம்பிக்கைத் துரோகமும்
நாசகார சக்திகளும்
மனிதனை மிருகமாக்கும்
மடமைகள் மலிந்து போனது.

தேடியதெல்லாம் நிலைக்கும் என்று
விழித்திருந்து தேடுகிறான்.
தூக்கத்தைத் தொலைக்கிறான்
நிம்மதி இழக்கிறான் .

மனித மனங்களில் குடி கொண்ட
தீய எண்ணங்களால்
வாழ்க்கைப் பாதையில்
வழிதவறிப் போகின்றான் .

மதத்தை அவமதித்து
மனம்போன போக்கில் வாழ்கிறான்
சமயங்களில் மதங்கள் கூட
மதம் பிடித் தலைகிறது......

தீயவன் கெட்டவன்
இவ்வுலகில் எதைப் பெற்றான்
நாளை வரும் மறு வாழ்விற்காய்
எதைத் தான் சேர்த்தான்.

மனிதனைப் புனிதமாக்க
மரணத்தை நினைத்திடுங்கள்.
நல்லெண்ணம் வாழ்வில்
மனிதனைப் புனிதமாக்கும்.


உங்கள் சொந்த இயல்புக்கு உண்மையாக இருப்பதே மிகப்பெரிய சமயம். உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள் – சுவாமி விவேகானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# திருகோணமலை திருமங்கலாய் காட்டுப்பகுதியில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவன் ஆலயம்

பேராசிரியர் பரமு புஷ்பரெட்ணம்,
யாழ்ப்பாணம்.

இலங்கையில் இந்துமதத்துக்கு 2500 ஆண்டுகளுக்கு குறையாத வரலாறு உண்டு. பௌத்தமதத்தை முன்னிலைப்படுத்தி எழுந்த பாளி இலக்கியங்கள் கி.மு.3 ஆம் நூற்றாண்டில் பௌத்தமதம் அறிமுகமாவதற்கு முன்னரே இலங்கையில் இந்து மதமும், அந்த மதம் சார்ந்த ஆலயங்களும் இருந்ததாகக் கூறுகின்றன. அவற்றுள் கிழக்கிலங்கையில் இருந்த இற்றைக்கு 1600 ஆண்டுகளுக்கு முற்பட்ட மூன்று சிவன் ஆலயங்கள் பற்றி மகாவம்சம் கூறுகின்றது.

திருக்கோணமலை திருமங்கலாய்க் காட்டுப்பகுதியில் தொல்லியல் ஆய்வுகளில் ஈடுபட்ட போது சமகால இலங்கையில் அதிலும் குறிப்பாக வடக்கு – கிழக்கு மாகாணங்களில் ஆயிரக்கணக்கான இந்து ஆலயங்கள் புதுப் பொலிவுடன் காணப் படுகின்றன. அவற்றுள் கணிசமான ஆலயங்கள் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் உள்நாட்டு மக்களுக்கு மதசுதந்திரம் வழங்கப்பட்டதன் பின்னர் பழைய ஆலயங்கள் இருந்த இடங்களில் அல்லது பழைய ஆலயங்களின் பெயரை நினைவுபடுத்தி புதிய இடங்களில் கட்டப்பட்டவையாக உள்ளன. போர்த்துக்கேயர் ஆட்சிக்கு முன்னர் இம் மாகாணங்களில் இருந்த ஆலயங்கள் பற்றி இலக்கியங்கள், புராணங்கள், கல்வெட்டுகள், ஐரோப்பியர் கால ஆவணங்கள் என்பவற்றில் பல வரலாற்றுக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

ஆயினும் தற்காலத்தில் அவ்வாலயங்கள் இருந்த ஒரு சில இடங்களில் மட்டும் அவ்வாலயங்களின் அழிபாடுகளை அடையாளம் காணமுடிகின்றது. ஆயினும் அவ்வழிபாடுகளை வைத்து அவ்வாலயங்களின் கட்டட அமைப்பையோ, கலை மரபையோ, வழிபாட்டிலிருந்த தெய்வங்கள் பற்றியோ அறிய முடியவில்லை. இதற்கு இம் மாகாணங்களின் கரையோரங்களில் ஆதிக்கம் செலுத்திய போர்த்துக்கேயரும், பின்வந்த ஒல்லாந்தரும் உள்நாட்டு மதங்களுக்கு எதிராகக் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையால் இவ்வாலயங்கள் அழிக்கப்பட்டதே காரணியமாகும். அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களின் கட்டிடப் பாகங்களைக் கொண்டே அவர்களின் ஆட்சிக்காலக் கோட்டைகள், கிறிஸ்தவ ஆலயங்கள், நிர்வாகக் கட்டடங்கள் என்பன கட்டப்பட்டன. இந்த உண்மையை அவர்களின் ஆட்சி ஆவணங்களே உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றன. இதைத் தற்போது யாழ்ப்பாணக் கோட்டையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வில் கிடைத்துவரும் இந்து ஆலயங்களுக்குரிய கட்டடப் பாகங்கள் மேலும் உறுதிசெய்கின்றன. இருந்த போதிலும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியில், அவர்களின் ஆதிக்கம் பெரும்பாலும் இலங்கையின் கரையோரப் பகுதிகளை அண்டிய மாகாணங்களில் ஏற்பட்டிருந்ததனால் அவர்களின் கலையழிவுக் கொள்கையில் இருந்து மாகாணங்களின் உட்பகுதியில் இருந்த ஆலயங்கள் தப்பித்திருக்க இடமுண்டு. அவற்றில் ஒன்றாகவேதிருமங்கலாய்ச் சிவன் ஆலயத்தைப் பார்க்கின்றேன்.

இவ்வாலயம் திருக்கோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசசபைக்குட்பட்ட திருமங்கலாய் என்ற வரலாற்றுப் பழமை வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயம் பற்றி திருக்கோணமலை தலபுராணங்களில் ஒன்றான திருக்கரைசை புராணத்திலும் கூறப்பட்டுள்ளது. ஆயினும் தற்போது இவ்வாலயம் கிளிவெட்டியின் பிரதான வீதியில் இருந்து ஏறத்தாழ பத்து கிலோ மீற்றர் தொலைவில் மின்சாரவேலி போடப்பட்ட அடர்ந்த காட்டின் மத்தியில் காணப்படுகின்றது. இவ் விடத்திற்குச் செல்லும் பாதையில் பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர் யானைகளின் நடமாட்டத்தை எதிர்கொள்வது சாதாரண நிகழ்வாகவே இருக்கின்றது. இவற்றின் கரணியமாகவே இதுவரை தொல்லியல், வரலாற்று ஆய்வாளர்கள் இவ்வாலயத்தை நேரில் சென்று ஆய்வு செய்வதில் தயக்கம் காட்டி வந்துள்ளனர் எனலாம்.

இந்நிலையில் திருமங்கலாய்ப் பிரதேசத்தில் வாழ்ந்த மூதாதையினரின் வழித் தோன்றல்களாக தற்போது இலிங்கபுரத்தில் வாழ்ந்து வரும் திரு.வி.முத்துலிங்கம், திரு.கே. குலேந்திரராசா, திரு. கே. மாணிக்கராசா முதலியோர் இவ்வாலயத்தை ஆய்வு செய்வதற்கு எமக்கு வழங்கிய பாதுகாப்பு உத்தரவாதமும் உதவிகளும் அவ்வாலயத்தை நேரிற்சென்று ஆய்வு செய்வதற்கு தூண்டுதலாக அமைந்தன. இந்த ஆய்வில் எமது பல்கலைக்கழக தொல்லியல் இறுதிவருட மாணவர்களுடன் மத்திய கலாசார நிதிய யாழ்ப்பாண செயல்திட்ட முகாமையாளர் திரு. லக்மன் சந்தன மைத்திரிபால மற்றும் யாழ்ப்பாண பிராந்திய தொல்லியற் திணைக்கள அதிகாரிகளான திரு.மணிமாறன், திரு.கபிலன் ஆகியோர் பல சிரமங்களுக்கு மத்தியில் எம்முடன் இணைந்து பல நாட்களாக ஆய்வில் பங்கெடுத்தமை மாணவர்களுக்குப் புதிய ஆய்வு அனுபவத்தைக் கொடுத்தது.

**அழிவடைந்து கொண்டிருக்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவன் ஆலயம்**

தற்போது இவ்வாலயத்தின் பெரும்பகுதி முற்றாக அழிவடைந்து அதன் அழிபாடுகள் ஆங்காங்கே கற்குவியல்களாகக் காணப்படுகின்றன. ஆயினும் அவ்வாலயத்தின் கட்டட அமைப்பையும், அதன் கலை மரபையும், ஆலயம் தோன்றி வளர்ந்த காலத்தையும் உறுதிப்படுத்தக் கூடிய நம்பகரமான ஆதாரங்களை அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றது. கருங்கற்களையும், செங்கற்களையும் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்ட இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகமும் அதன் மேலமைந்த விமானமும் முற்றாக அழிவடைந்து அதன் கட்டடப் பாகங்கள் ஆங்காங்கே சிதறுண்டு காணப்படுகின்றன. கர்ப்பக்கிரகம் இருந்த இடம் பிற்காலத்தில் புதையல் எடுப்போரால் தோண்டப்பட்டு அவ்விடம் தற்போது ஒரு குழியாகக் காணப்படுகின்றது. கர்ப்பக் கிரகத்திற்கு முன்னால் அழிவடைந்து காணப்படும் அந்தராளத்தில் ஆலய காலப் பொருட்கள் சிலவற்றுடன் பிற்காலத்தில் கொண்டுவந்து வைக்கப்பட்ட சிவலிங்கமும் காணப்படுகின்றது. அந்தராளத்திற்கு முன்னால் மகாமண்டபமும், பலிபீடமும் இருந்தற்கான அத்திவாரங்களும், அதற்குப் பயன்படுத்தப்பட்ட அலங்காரத் தன்மை கொண்ட பல கருங்கற் தூண்களும் காணப்படுகின்றன. இம்மகா மண்டபத்திற்கு வலப்பக்கமாக பயன்படுத்தப்படாத நிலையில் கருங்கற்களாலான மாடங்கள், தெய்வச் சிலைகள் வைப்பதற்குப் பயன்படுத்திய பீடங்கள் மற்றும் புடைப்புச் சிற்பங்களும் காணப்படுகின்றன. மகாமண்டபத்தின் இடப்பக்கமாக ஆலயத்தில் பயன்படுத்தியிருந்த கோமுகிகள், சந்தனம் அரைக்கும் கற்கள், கபோத வடிவிலமைந்த அரைவட்டத் தூண்கள் காணப்படுகின்றன. மகாமண்டபத்திற்கு மிக அருகில் கருங்கற்களைக் கொண்டு சற்சதுர வடிவில் ஆழமாகக் கட்டப்பட்ட ஆலயத்தின் தீர்த்தக் கிணறு காணப்படுகிறது. மேலும் இவ்வாலயத்தைச் சுற்றி சுற்று மதில்களும் அவற்றிடையே துணைக் கோவில்களும் (பரிவாரத் தெய்வங்கள்) இருந்திருக்கலாம் என்பதை அவற்றிற்குரிய அத்திபாரங்களும், பரவலாகக் காணப்படும் செங்கற்களும், கருங்கற்களும் உறுதிப்படுத்துகின்றன.

**ஆயிரமாண்டுகளுக்கு-முற்பட்ட-கல்வெட்டுகள்-3**

இந்த ஆய்வின் போது கட்டட அழிபாடுகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து தமிழ்க் கல்வெட்டுக்கள் இவ்வாலய வரலாற்றுடன், கிழக்கிலங்கை வரலாறு பற்றிய ஆய்விலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றன. எமக்குத் தெரிந்தவரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள வரலாற்றுப் பழமைவாய்ந்த ஆலயங்களுடன் அவ்வாலயங்களின் வரலாறு கூறும் கல்வெட்டுக்களும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிய வில்லை. ஆனால் அந்த இரண்டு அம்சங்களும் முதன் முறையாகத் திருமங்கலாயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களின் எழுத்தமைதியைக் கொண்டு அவை வேறுபட்ட காலங்களில், வேறுபட்ட நோக்கங்களுக்காக பொறிக்கப்பட்டவை என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது. அவற்றுள் கி. பி. 10ஆம், கி. பி. 11ஆம் நூற்றாண்டுக்குரிய மூன்று கல்வெட்டுக்கள் ஆலய நிர்வாக ஒழுங்குகள் பற்றியும், அவ்வாலயத்திற்கு சிற்றம்பலம் உடையார், திருவெண்ணைக்கூற்றன், திருவரங்கம் முதலான அதிகாரிகள், சமூகப் பெரியவர்கள் வழங்கிய தானங்கள் (காசு) பற்றியும் கூறுகின்றன. கி. பி. 15ஆம், கி. பி. 16ஆம் நூற்றாண்டுக்குரிய ஏனைய இரு கல்வெட்டுக்களும் இவ்வாலயத்திற்கு பசுக்கள் தானமாக வழங்கப்பட்ட செய்திகளைக் கூறுகின்றன. இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கங்குவேலி என்ற இடத்தில் திருமங்கலாய் ஆலயத்திற்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி ஒன்று காணப்படுகின்றது. இது திருமங்கலாய் ஆலயத்தில் இருந்து பிற் காலத்தில் கங்கு வேலிக்கு எடுத்துச் செல்லப்பட்ட மணியாகும். அவ்வாலய மணியில் திருமங்கலாய் கோவிலுக்கு அவ்வூரில் வசித்த (திருமங்கலாயில் வசித்த) "பத்திபெட்டி மகன் பத்தன்யுடைய உபையம்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இச்சாசனத்தின் எழுத்தமைதி கொண்டு இதன் காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டிற்கு உரியதெனக் கூறலாம். ஆகவே மேற்கூறப்பட்ட கல்வெட்டுகள், ஆலய மணிச் சாசனம் என்பவற்றை ஆதாரங்களாகக் கொண்டு இவ்வாலயம் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஏறத்தாழ 17ஆம் நூற்றாண்டுவரை அழிவடையாத நிலையில் இப்பிரதேச மக்களால் வழிபடப்பட்டு வந்துள்ளமை தெரியவருகின்றது. இவ்வாலயம் இலங்கைத் தமிழர் குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாறு, பண்பாடு பற்றிய ஆய்வில் பின்வரும் அம்சங்களில் முக்கியத்துவம் பெறுகின்றதை அவதானிக்க முடிகின்றது.

**ஆயிரமாண்டுகளுக்கு–முற்பட்ட–கல்வெட்டுகள்–1**

1. இவ்வாலயம் கி. பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து திராவிடக் கட்டடக்கலை மரபில் தோன்றி வளர்ந்ததற்குப் பின்புலமாக திருமங்கலாய்ப் பிரதேசத்தின் தொன்மையான செறிவான தமிழ்க் குடியிருப்புக்கள் இருந்துள்ளமை தெரிகின்றது. இந்த உண்மையை எமது ஆய்வின் போது இப்பிரதேசத்தில் ஆங்காங்கே பிற தேவைகளுக்காக வெட்டப்பட்டிருந்த ஆழமான குழிகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட 10 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட மட்பாண்ட ஓடுகள், கூரை ஓடுகள், சுடுமண் உருவங்கள் முதலான சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

2. தமிழகத்தில் பல்லவர் ஆட்சியில் தோன்றிய பக்தி இயக்கத்தின் செல்வாக் கால் சமகால இலங்கையிலும் கற்களைப் பயன்படுத்தி திராவிடக் கலைமரபில் ஆலயங்கள் அமைக்கும் மரபு தோன்றி வளர்ந்ததைக் காணமுடிகின்றது. அவற்றுள் சோழ ஆட்சியின் தலைநகராக இருந்த பொலநறுவையில் கட்டப்பட்ட இரண்டாம் சிவதேவாலயமே இலங்கையில் இதுவரை ஓரளவு முழுமையாகக் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தால் முந்திய திராவிடக் கலைமரபில் கட்டப்பட்ட ஆலயம் எனக் கூறப்படுகின்றது. ஆனால் பொலநறுவை இராசதானி கால வரலாற்றில் எந்த இடத்திலும் சொல்லப்படாத திருமங்கலாய் சிவன் ஆலயம் அதன் கட்டட அமைப்பிலும், கலைமரபிலும் சற்று மேலோங்கிக் காணப்படுவதன் முக்கியத்துவம் எதிர்காலத்தில் விரிவாக ஆராயப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

3. சோழர் ஆட்சியிலும் சோழர் ஆட்சிக்குப் பின்னரும் பொலநறுவைக்கு அப்பால் வடக்கு கிழக்கு இலங்கையிலேயே சோழ ஆட்சியாளர், தமிழ் அதிகாரிகள், தமிழ் வணிக கணங்கள் முதலியோரால் கட்டப்பட்ட ஆலயங்கள் பற்றிப் பல தமிழ் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஆயினும் அக்கல்வெட்டுக்கள் கூறும் ஆலயங்கள் எந்த இடங்களில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துள்ளன என்பது பெரும்பாலும் இதுவரை அடையாளம் காணப்படாமலே உள்ளன. ஆனால் திருமங்களாயில் ஆலயம் பற்றிய கல்வெட்டுக்களுடன், ஆலய அமைப்பையும், அதன் கலை மரபையும் அறியக்கூடிய அரிய பல ஆதாரங்கள் முதன் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாதாரங்கள் கிழக்கிலங்கை இந்துக்களின் வரலாறு, பண்பாடு பற்றிய எதிர்கால ஆய்வுகளில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படு
கின்றன.

4. இலங்கையில் அநுராதபுர இராசதானியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சில பௌத்த ஆலயங்களே தற்காலத்திலும் வழிபாட்டிற்குரிய ஆலயங்களாகக் காணப்படு கின்றன. ஆனால் அநுராதபுரத்திலும், இலங்கையின் ஏனைய இடங்களிலும் கண்டு பிடிக்கப்பட்ட பெரும்பாலான ஆதிகால, இடைக்கால ஆலயங்கள் இலங்கையின் மரபுரிமைச் சின்னங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பிற்காலத்தில் அவை சுற்றுலாத் துறையின் முக்கிய மரபுரிமை மையங்களாகவே செயல்பட்டு வருகின்றன.

ஆனால் திருமங்கலாய் சிவன் ஆலயம் கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து 1964 ஆம் ஆண்டு வரை அங்கு வாழ்ந்த மக்களின் பிரதான வழிபாட்டு ஆலயமாகவே இருந்துள்ளது. இந்த உண்மையை அவ்வாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களும், ஆலயமணியில் பொறிக்கப்பட்டிருக்கும் சாசனமும், அங்கு பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்களின் நில உரிமைப் பத்திரங்களும் உறுதிப் படுத்துகின்றன.

**ஆயிரம்–ஆண்டுகளுக்கு–முற்பட்ட–சிவன்–ஆலயம்–2**

இவ்வாலயத்தின் பழமையையும், அதன் வரலாற்றுப் பெறுமதியையும் எமது ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியதைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட சக்தி தொலைக்காட்சி நிறுவனம் இவ்வாலயத்தை ஆவணப்படுத்த முன்வந்தது. இதற்காக அரச திணைக்கள அனுமதியுடன் அன்றைய சக்தி வானொலி அலை வரிசை பிரதானி திருமதி உமாச்சந்திரா பிரகாஷ் தலைமையில் தற்போதைய சக்தி வானொலி அலைவரிசை பிரதானி ஆர். பி. அபர்ணா சுதன், திரு. ஞா. கணாதீபன் முதலியோரைக் கொண்ட குழுவினரை திருமங்கலாய்க்கு அனுப்பி வைத்தது. அவர்கள் ஏழு மைல் தூரம் கால் நடையாகவும், உழவு இயந்திரத்திலும் அச்சத்துடன் காட்டு வழியாகப் பயணம் செய்து திருமங்கலாய் சிவன் ஆலயத்தில் காணப்பட்ட அனைத்து ஆதாரங்களையும் ஆவணப்படுத்தினர். இவ்வரிய பணியால் ஆய்வில் ஈடுபட்ட எமக்கும் அங்கு கூடியிருந்த மக்களுக்கும் தனது காலத்திலேயே இவ்வாலயத்தை மீளுருவாக்கம் செய்திட வேண்டும் என அயராது உழைத்து வரும் திரு. வி. முத்துலிங்கத்திற்கும் பெரும் மகிழ்ச்சியும், நம்பிக்கையும் ஏற்பட்டிருந்தது.


ஓர் அவுன்ஸ் பொறுமை ஒரு தொன் பேருரையை விட மதிப்புமிக்கது — மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தை ஆவணப்படுத்திய சக்தி தொலைக்காட்சி நிறுவனம் அது பற்றிய செய்தியை மக்களிடம் கொண்டு சென்ற போது இவ்வாலயம் பற்றி மேலும் அறிய வேண்டும், நேரில் பார்வையிட வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. இதை உணர்ந்து கொண்ட நாம் இவ்வாலயத்தை மீளுருவாக்கம் செய்து பாதுகாக்கும் நோக்கில் திருமதி உமாச்சந்திரா பிரகாஷ் அவர்களுடன் இணைந்து பல முயற்சிகளில் ஈடுபட்டோம் அதற்காக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், அமைச்சின் அதிகாரிகள், கௌரவ இராஜங்க கல்வி அமைச்சர் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் முதலியோரின் உதவிகளை நாடினோம். இலங்கைத் தொல்லியற் திணைக்களம் தனது அதிகாரிகளை அனுப்பி இவ்வாலயத்தின் பழமையை உறுதிப்படுத்திக் கொண்டது. மத்திய கலாசார நிதியம் ஆலயத்தை மீள்புனரமைப்புச் செய்வதைப் பரிசீலிப்பதாகப் பதில் அனுப்பியது. ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின்னர் எமது கோரிக்கைகளைச் சாதகமாகப் பரிசீலிக்க முன்வந்த அதிகாரிகளும் பதவி மாற்றம் செய்யப்பட்டதால் தற்போது, எல்லா முயற்சிகளையும் நாம் ஆரம்பத்தில் இருந்தே தொடங்கவேண்டிய நிலையில் உள்ளோம். அதற்கு நாட்டின் தற்போதைய நிலையும் சாதகமாகக் காணப்படவில்லை.

இருப்பினும் விலைமதிக்க முடியாத எமது மரபுரிமைச் சின்னம் ஒன்று எம் கண் முன்னே மண்ணுக்குள் மறைந்து போவதை வேடிக்கை பார்க்கும் நிலையும் இல்லை என்றே நம்புகின்றோம். ஏனெனில் கடந்த முப்பது ஆண்டுகால அனர்த்தத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்து வாழ்ந்த எமது மக்கள் மீண்டும் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிய போது தமது இருப்பிடங்களைக் காட்டிலும் தமது வழிபாட்டு ஆலயங்களை மீளுருவாக்கம் செய்வதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்த பெருமைக்குரியவர்கள். இது மதத்தின் மீது எமது மக்களுக்கு உள்ள அதீத நம்பிக்கையைக் காட்டுகின்றது. ஆனால் திருமங்கலாய் சிவன் ஆலயத்தை ஒரு வழிபாட்டு ஆலயமாக மட்டும் பார்க்க முடியவில்லை. பலதரப்பட்ட மக்களின் பார்வையில் இவ்வாலயம் இலங்கையில் உள்ள தேசிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக நோக்கப்படலாம். ஆனால் இந்து மக்களைப் பொறுத்தவரை இவ்வாலயம் அவர்களின் எதிர்காலச் சந்ததியினரிடம் கையளிக்கப்பட வேண்டிய நம்பிக்கை நாற்று. அதற்கும் அப்பால் இலங்கையில் இந்து மதத்திற்கு நீண்ட வரலாறு உண்டு என்பதை அடையாளப்படுத்தும் விலை மதிக்க முடியாத மரபுரிமையின் அடையாளம். இம்மரபுரிமைச் சின்னங்களுக்குப் பின்னால் தமிழ் மக்களின் வரலாறும் பண்பாடும் பொதிந்து காணப்படுகின்றன. ஆகவே இவ்வாலயத்தை மீட்டெடுத்து மீளுருவாக்கம் செய்து, பாதுகாக்க அனைத்து தமிழர்களும் ஒன்றிணைந்து உழைக்க முன்வர வேண்டும். இப்பணி அரசியல், பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. இந்த உண்மையை உரியவர்களிடம் கொண்டு செல்வதற்கு எமது ஊடகங்கள் தமது பணியை தொடர்ந்தும் செய்வார்கள் என்ற நம்பிக்கை எப்போதும் எமக்குண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்மட படைப்பாளி

## சின்னத்துரை சுந்தரலிங்கம்

திருக்கோணமலையின் மூத்த எழுத்தாளர் 'திருமலை சுந்தா' எனும் புனைபெயரால் அழைக்கப்படுகின்ற திருக்கோணமலையைச் சேர்ந்த சின்னத்துரை சுந்தரலிங்கம் அவர்கள் 1951.03.11 ஆம் நாளில் பிறந்தவர். திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் கல்வி கற்றவர். பல புனைபெயர்களில் இலக்கியம் படைத்தாலும் 'திருமலை சுந்தா' என்ற புனைப்பெயர் மூலம் அதிகம் அறியப்பட்டவர்.

**முதல் கவிதை**

தனது பதினேழாவது வயதில் இவரது கன்னிக்கவிதை 'ஜோதி' வார இதழில் வெளியானதன் மூலம் இலக்கிய உலகில் உள்நுழைந்தார்.

**முதல் சிறுகதை**

'என்னை அழைக்கிறாள்' என்ற இவரது முதலாவது சிறுகதை 1971 ஆம் ஆண்டு 'மித்திரனில் 'வெளியானது. 'சிந்தாமணி, வீரகேசரி, தினகரன், சிரித்திரன், அபியுக்தன், சுடர்' உள்ளிட்ட நாளேடுகளிலும், இதழ்களிலும் இவரது படைப்புகள் வெளியாகியுள்ளன. நூற்றியைம்பதிற்கு மேற்பட்ட சிறுகதைகள் இதுவரை எழுதியுள்ளார்.

இதனைவிட பல்வேறு நாடகங்களும் எழுதியுள்ளார். 'தினரகன், வீரகேசரி' ஆகிய நாளேடுகளில் இவரது நாடகங்கள் பிரசுரமாகி உள்ளன. இவர் ஒரு பாடலாசிரியமாவார். 'இலங்கை வானொலியில்' இவரது பல ஈழத்துப்பாடல்கள் ஒலித்துள்ளன.

**அச்சுருவாக்கப்பட்ட படைப்புகள்**

'வேள்வி, விழியோரத்துக் கனவுகள், நாளையைத் தேடும் மனிதர்கள்' ஆகிய சிறுகதைத் தொகுதிகள், 'நான் அவள்' என்ற குறுங்கதைத்தொகுதி, 'அம்மா, தொலைந்த நாட்கள்' ஆகிய கவிதைத் தொகுதிகள், 'சடங்கு - கட்டுரைத்தொகுதி, போராடப் பிறந்த வர்கள் - நாவல், சிவனொளி சிற்றிதழ் தொகுப்புகள்' என இவரது பத்து நூல்கள் இதுவரை வெளியாகியுள்ளன.

**ஊடகவியலாளராக திருமலை சுந்தா**

'மாணிக்கம், சுதந்திரன், சுடர்' போன்ற நாளேடுகளின் ஊடகவியலாளராகவும் பணி யாற்றியுள்ளார். 'திருவாளர் பொதுசனம், கண்டோம் கருத்தறிந்தோம்' போன்ற தலைப்புகளிலான நேர்காணல்கள் சுடர் நாளேட்டிற்காகச் செய்துள்ளார்.



ஒரு மனிதன் அவனுடைய எண்ணங்களின் விளைபொருளே — மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதுமை நெஞ்சங்கள்

கவிஞர் செ.நவசோதிராசாவுடன் இணைந்து 'புதுமை நெஞ்சங்கள்' என்ற இலக்கிய அமைப்பை உருவாக்கி அதன் மூலம் பல்வேறு இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார். இதன் மூலம் க.அருள்சுப்ரமணியம், தாபி சுப்ரமணியம் ஆகியோரின் நட்பு ஏற்பட்டது. 'புதுமை நெஞ்சம்' என்ற ரோணியோ இலக்கிய இதழ் இவர்களால் வெளியிடப்பட்டது.

### சிற்றிதழ்களின் ஆசிரியர் திருமலை சுந்தா

மானுடம் (இலக்கிய சிற்றிதழ்), சிவனொளி (ஆன்மீக சிற்றிதழ்), சுகமா (உடல்நலச் சிற்றிதழ்), சிட்டு (சிறுவர் சிற்றிதழ்), சிவநெறி (தொடர் இதழ்), புதுமை நெஞ்சங்கள் (இலக்கிய இதழ்) ஆகியவற்றின் ஆசிரியராகவும் செயற்பட்டுள்ளார். அநுராதபுரம் அன்பு ஜவகர்ஷா தொகுத்த நாற்பத்துநான்கு கவிஞர்களின் 'பொறிகள்' என்ற கவிதைத் தொகுப்பில் இவரது கவிதையும் உள்ளது. 'சுதந்திரன் சிறுகதைகள்' தொகுப்பில் இவரது 'பயணத்திற்கு சொல்லவில்லை' கதை சேர்க்கப்பட்டுள்ளது.

### அம்மா பதிப்பகம்

திருக்கோணமலை அம்மா பதிப்பகத்தின் நிறுவுனர் இவர். இந்தப் பதிப்பகத்தின் மூலம் கவிதை, சிறுகதை, விளையாட்டு, ஆன்மீகம், நாவல் என இதுவரை இருபத்தியொன்பது நூல்கள் வெளியிட்டுள்ளார். பல கோயில்களின் குடமுழுக்கு மலர்களின் தொகுப்பாசிரியராகச் செயற்பட்டுள்ளார். ஆயிரத்துக்கு மேற்பட்ட கல்வெட்டுப் பொத்தங்களின் தொகுப்பாசிரியராகவும் செயற்பட்டுள்ளார்.

### இலக்கிப் போட்டிகளில் திருமலை சுந்தா

திருக்கோணமலை பட்டினமும், சூழலும் பிரதேச செயலகத்தினால் 1997, 1998, 1999 ஆகிய ஆண்டுகளில் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் தொடர்ச்சியாக முதற்பரிசு பெற்றுள்ளார்.

### மதிப்பளிப்புகள்

சுதந்திரன் சிறுகதைப் பாராட்டுவிழா, தேசிய வாசிப்பு வாரவிழா, நூலகநாள்விழா போன்றவற்றில் மதிப்பளிப்புகளைப் பெற்றுள்ளார். கிழக்குமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நடுவர் குழாமின் உறுப்பினராக கடந்த சில ஆண்டுகளாக பணியாற்றி வருகின்றார்.

### பெற்றுக்கொண்ட விருதுகள்

2011 ஆம் ஆண்டில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 'கலாபூசணம்' விருது திருமலை சுந்தா அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 'வித்தகர்' விருதுக்கும், 'திருக் கோணமலை நகர முதல்வர்' விருதுக்கும் திருமலை சுந்தா அவர்கள் சொந்தக்காரரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரடி ஈரடி நாலடி என்று
கீழடி வரையில் செம்மொழி பரப்பி
ஓராயிரமாய் பல்கதை சொன்னான் – தமிழன்
ஒல்காப்புகழாம் தொல்காப்பியத்தில்...

மூன்றடி யில் உலகளந்த வாமனம் மிஞ்சி
மூப்பில்லாத் தமிழால் ஈரடி கொண்டே
உலகளந்து நின்றான் எந்தன் முத்தமிழ்ப் பாட்டன்
வள்ளுவம் தந்த வள்ளலாம் வள்ளுவப்
பெருந்தகை....

மூவேந்தரோ முச்சங்கம் அமைத்து தமிழ் வளர்க்க
முக்கண்ணன் மொழிந்திட்ட கவியே குறையென்று
அந்த
இறையனாரையே இழிந்துட்டுக் கேட்டான் ஒருவன்
இணையற்ற பழந்தமிழ்ப்புலவன் நக்கீரனாவான்....

மேதினியிலே உள்ள வேற்று மொழிக்கில்லா
மேலான சிறப்பு என்தாய் தமிழுக்கு உள்ளதா
எனின்
நிச்சயம் வீறு கொண்டு தலை நிமிர்ந்து தமிழனாய்
உரைப்பேன் – அது நிதர்சனமாய் உண்மை
என்று....
மற்றைய நாகரிகங்களோ மங்கையரை வெறும்
புணர் போகமாய் பரிந்துரைக்க
சங்கம் தொட்டே என் தமிழில் ஈரிருவது
பெண்டிர்க்கும் மேலானோர் எழுதிட்டார் தேன்
மதுரத் தமிழ் கவியை
வளர்த்திட்டார் எந்தன் செம்மொழியாம்
தமிழ் மொழியை...

அகப்பொருட் கோவை தொடங்கி எழுகூற்றிருக்கை

வேணியலங்காரராம் அந்த வெண்பனி மலையான்
தன்மடை திறந்தான் அன்று
புண்ணிய தலமாம் திருமறைக்காட்டில்....

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்று
ஒல்காப்புகழ் தந்த தொல்காப்பியன் கூறிட
அதைச் சிரம் மேற் கொண்டு செவ்வனே செய்து
முடித்தான்
முத்தமிழ் முனிவன் முண்டாசுக் கவிஞன் பாரதி....

இட்டார் பெரியார் இடாதார் இழி குலத்தார் என்று
இசையிலும் இனிய சொல்லாள் அவ்வை சொல்ல
காக்கை குருவி எங்கள் சாதி என்று – அந்த
சாதிக்கோர் சவுக்கடி கொடுத்தான்
சமரசமில்லாக் கவிஞனவன்....
பஞ்சாட்சரம் பாடிடவோர் திருவாசகமிருக்க
பவுத்தம் பரப்பிடவோர் குண்டலகேசி
சிலுவைகள் சுமந்திடவோ தமிழ் தந்த. தேம்பாவணி
சிலையில்லா மார்க்கத்திற்கென்றோர்
சீறாப்புராணம்....

பார்த்தால் பாவம் என்றும் தொட்டாலே தீட்டு
என்றும்
பக்தி நெறி என்ற பெயரில் எம்மை பலகாலம்
பிரித்திட்டார்
சாதி என்பதும் சமயம் என்பதும்
எங்கள் சங்கருக்கும் சாதனமே ஒழிய
ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று
உன்னை என்னை ஒரு தாய் பிள்ளையாக்குவது
நம் தாய்மொழி தமிழல்லோ ....

# எங்கள் தாய்மொழி தமிழ்

ர. லதுஷன்
தி/இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்ரா இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் திறனாய்வு

## திருமலை இ.மதன் அவர்கள் எழுதிய 'பாதை மாறிய பயணங்கள்'

சம்பூரணி, சுஜாந்தினி யுவராஜா திருக்கோணமலை

ஈழத்து இலக்கிய வரலாற்றில் சிறுகதைகளின் வரிசையில் ஈழத்து நாளிதழ்களில் எழுத்தாளராக அறிமுகமான தம்பலகமம்,திருக்கோணமலையைச் சேர்ந்த இளம் எழுத்தாளர் திருமலை இ. மதன் அவர்களின் 'பாதைமாறிய பயணங்கள்' சிறுகதைத் தொகுப்பானது அம்மா பதிப்பகத்தின் பன்னிரண்டாவது பதிப்பாக இருபத்தியெட்டுச் சிறுகதைகளைத் தாங்கி வெளிவந்திருப்பது வாசகர்களுக்கு மகிழ்வைத் தரும் செய்தியாகும். குமுகாயத்தில் நாளாந்தம் மனிதர்கள் முட்டிமோதும் பிரச்சினைகளைத் தன்னுள்வாங்கி அதற்கு வரிவடிவம் கொடுத்துச் சிறுகதை இலக்கியத்தில் அவர் தன்னைப் புகுத்திக்கொண்ட துணிவு, நம்மை பிரமிக்க வைத்திருப்பது இலக்கிய உலகிற்கு புதியதொரு சிறுகதை ஆசிரியரை அறிமுகமாக்கியிருப்பது மிக்க மகிழ்ச்சியே.

எழுத்தாளர்கள், கவிஞர்கள் போன்றவர்களிடம் இயல்பாகவே காணப்படுகின்ற சமூகப் பிரக்ஞை காரணியமாக சமூகத்தின் பல்வேறு அங்கங்களிலும் காணப்படுகின்ற குறைகளையும், அவலங்களையும், தமது படைப்புகள் மூலம் வெளிப்படுத்துகின்றனர். வாழ்க்கையின் இன்ப துன்பங்களையும், வெற்றி தோல்விகளையும், ஊடுருவிப் பார்க்கின்ற ஒரு திறன் படைப்பாளிகளிடம் உண்டுதான் கண்டவற்றையும் அனுமானித்தவற்றையும் கதைகளாக, கவிதைகளாக, மற்றும் துணுக்குகளாக வடிவமைத்துச் சமூகத்திற்கு தந்துவிடுகின்றனர் இத்தகைய படைப்புக்களை சுவைக்கின்ற வாசகனின் மனதில் குமுகாயச் சிக்கல்கள் பற்றிய ஒரு நெருடலையாவது ஏற்படுத்திவிட்டால் அது படைப்பாளிக்கு கிடைத்த வெற்றியேயாகும்.

அந்த வகையில் திருமலை மதன் அவர்களது இந்தச்சிறுகதைகளை நோக்கும் போது இன்றைய குமுகாயச் சூழலில் தனிமனிதன் ஒருவனைப் பாதிக்கின்ற பலதரப்பட்ட விடயங்களை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருப்பதைக் காணமுடிகின்றது. குமுகாயக் கட்டமைப்பின் பலவீனம் காரணியமாக தனிமனிதனின் விருப்புகள், எதிர்பார்ப்புகள் என்பன எவ்வாறு ஏக்கங்களாகவும், துயரங்களாகவும் மாறுகின்றது என்பதை தனது சின்னச் சின்ன கதைகளுடாக காட்டி இருக்கின்றார். இச்சிறுகதைத் தொகுப்பின் முதலாவது கதையாக "முதிர்கன்னி "எனும் சிறுகதை காணப்படுகின்றது. இக்கதையில் காதலித்து கைவிடப்பட்டு சீதனச் கொடுமையால் இன்னும் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாத முப்பத்தொன்பது வயதுடைய பெண்ணை, திருமணத்திற்காக ஏங்கித்தவிக்கும் எத்தனையோ பெண்களின் பிரதிநிதியாக காட்டியிருக்கும் கதாசிரியர் குமுகாயத்தின் மீது ஆதங்கப்படுகின்றமையைக் காணமுடிகிறது.

பெற்றோரின் வற்புறுத்தல்களால் தான் நேசித்தவர்களைக் கைவிட்டு பெற்றோரின் திருப்திக்காக வேறொருவருடன் திருமணம் செய்து கொண்டு வலிகளோடு நொந்துபோன வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களைப் பற்றியதாக "மகனே என்னை மன்னித்துவிடு" என்ற கதை அமைகின்றது.

தனக்கு கிடைக்கும் கணவன் அழகானவனாக இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு பெண்களிடம் இருப்பது இயல்பானது. அழகை விட அவன் அன்பானவனாகவும், நல்ல தோழனாகவும், இருக்க வேண்டும் என்ற கருத்தை "எதிர்பார்ப்பு" என்ற கதையில் கதாசிரியர் வலியுறுத்தியுள்ளார்.

திருமணமாகி ஓர் ஆண்டில் இணையாக வாழ்ந்த மனைவியை இழந்து தவிக்கும் கணவனின் மனக்குமுறல்களையும் வாழ்க்கை என்பது எப்போதும் ஒரே நிலையில் இருப்பதில்லை இன்பமும் துன்பமும் இணைந்ததாகவே வாழ்க்கை அமைகிறது. அவ்வாறு இல்லாவிட்டால் வாழ்க்கை சுவாரசியமாக இருக்காதல்லவா? வாழ்க்கை என்பது சுண்டி விடப்பட்ட நாணயம் போன்றது. பூவும் விழலாம் தலையும் விழலாம் என்ற கருத்தினை தனது குழந்தைக்காய் இரண்டாம் தாரமாக இன்னொரு பெண்ணை மணந்த கணவன் தனது முதல் மனைவியை மறக்க இயலாது படும்பாட்டை கதை விளக்குகிறது.

மணமக்களிடையே திருமணப் பொருத்தம் எவ்வளவு இருந்தாலும் பெற்றோர்களுடைய சம்மதத்தைவிட, சாத்திரங்களுடைய பொருத்தங்களை விட, கிரகங்களின் இணக்கங்களை விட அந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலே புரிந்துணர்வு இருக்க வேண்டும் என்பதிலே உறுதியாக இருக்கும் ஒரு முற்போக்குடைய தரகரை "தரகர் தங்கராசு" என்ற கதையிலே காட்டியுள்ளார்.

பெண்களின் படிப்பையும் உத்தியோகத்தையும், முன்னேற்றத்தையும், சகித்துக் கொள்ளாத ஒரு கணவரிடம் இருந்து விவாகரத்து பெற்று குழந்தையுடன் தனித்து வாழ்கின்ற ஒரு பட்டதாரி ஆசிரியையை "வாழ்க்கை ஒப்பந்தம்" என்ற கதையில் மிக அழகாகக் காட்டுகின்றார் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாடம் உழைத்துச் சிக்கல்படும் குடும்பத் தலைவன் தான் பெற்ற குழந்தைகளை எவ்வாறாவது கல்வியில் உயர்த்தி ஆளாக்கி விடவேண்டும் என்ற கனவுகள் நிராசை யாகி, தந்தைக்குப் பின் குடும்பச்சுமையைச் சுமப்பதற்காக இடையிலே படிப்பைக் கைவிடும் பிள்ளைகள் பற்றிய குமுகாய விழிப்பைக் கதாசிரியர் "குச்சிஜஸ்" எனும் சிறுகதை மூலம் தூண்டி இருக்கின்றார்.

இவ்வாறாக குமுகாயத்தில் காணப்படும் பல்வேறு சிக்கல்களைத் தனது இருபத்தி யெட்டுக் கதைகளுடாகவும் கதாசிரியர் வழிப்படுத்தி உள்ளார். இவரது எளிமையான மொழிநடைக் கதை சொல்லும் திறனை மெருகூட்டுகிறது. தமிழை நேசிக்கும் அனைவரது வாசல்களையும் 'பாதை மாறிய பயணங்கள்' சென்றடையும் என்பதில் ஐயமில்லை.

மேலும். இத்தொகுப்பில் உள்ள கதைகளில் அனேகமானவை 'தனிமனித குடும்பச் சிக்கல்கள் பற்றியே பேசுகின்றன. காதல், பிரிவு, சாவு, விருப்பமில்லாத திருமணம், குழந்தை இல்லாத ஏக்கம், குடிகாரத் தந்தை, மனைவியை இழந்த கணவன்' இவ்வாறு வழமையான கருப்பொருள்களைத்தான் கதையாசிரியர் கையாண்டு இருக்கின்றார்.நூலாசிரியர், இனிவரும் காலங்களில் குமுகாய அவலங்கள் மீதான ஒழிப்பும் சிந்தனையும் இன்று எமது வாசகர்களுக்கு அவசியமான தேவையாக உள்ளன. அவ்வாறான படைப்புகளைப் படைக்க வேண்டும் என்பதே எமது ஆவலாக இருக்கின்றது ..அத்தகைய துணிவும், ஆற்றலும், திருமலை இ.மதன் அவர்களுக்கு நிறைய உண்டு. இவர் தொடர்ந்தும் பல சிறுகதைகளை எழுதி நல்லதொரு இலக்கியப் படைப்பாளியாக மிளிருவார் என்பதில் ஐயமில்லை. அவருக்கு எமது பாராட்டும் நல்வாழ்த்தும் ....

---

துளியில் தோன்றிய தோழா,
தூளியில் தூங்கிய பழக்கத்தை
வழக்கமாக்கினால்
விழித்
துளியில்
துடிப்பாய்.

மெய்த்துளி
உன் வழித்துளியானால்
களித்துளி களைகட்டும்.....

சிந்தும் துளியில்
சிந்தித்துப் பார்
பனித்துளியாய்
மலரும் வாழ்வு..



# துளி...

கிண்ணியா ஆர். சதாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அண்மையில் வெளியான
## நம்மட திருக்கோணமலைப் படைப்பாளிகளின்
# படைப்புகள்

| | |
|---|---|
| பெயர் | : காலாறப்போனவள் |
| ஆசிரியர் | : லலிதகோபன் |
| நூல் வகை | : கவிதைகள் |
| பக்கம் | : 110 |
| விலை | : உருபா. 500.00 |
| தொடர்பு | : புலனம் - 0777697050 |



| | |
|---|---|
| பெயர் | : நூறு மின்னல்கள் |
| ஆசிரியர் | : மாயன் |
| நூல் வகை | : நாவல் |
| பக்கம் | : 227 |
| விலை | : உருபா. 1200.00 |
| தொடர்பு | : புலனம் - 0777555738 |




| | |
|---|---|
| பெயர் | : வாசல் |
| ஆசிரியர் | : ச. திருச்செந்தூரன் |
| நூல் வகை | : கவிதைக்கான காலாண்டு இதழ் |
| பக்கம் | : 56 |
| விலை | : உருபா. 280.00 |
| தொடர்பு | : புலனம் - 0767687107, 0778918096 |



| | |
|---|---|
| பெயர் | : என் பேனா பேசியவை |
| ஆசிரியர் | : எம்.எச்.ஏ. ஹஸன் |
| நூல் வகை | : கட்டுரை |
| பக்கம் | : 56 |
| விலை | : உருபா. 650.00 |
| தொடர்பு | : புலனம் - 0771699147 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# RAY-BANS TRINCO

## Ray-Bans Special Offer 10% discount to customers who bring this advertisment

ரேபன்ஸ் இன் விசேட சலுகை இந்த விளம்பரத்தை கொண்டு வரும் வாடிக்கையாளருக்கு 10% விலைக்கழிவு வழங்கப்படும்

### OUR SERVICE

* Surgeon Consulting * OT Reference

026 22 22 116 415, Dockyard Road, Trinco.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org